பக்கங்கள்: பதின்நான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 28 திங்கட்கிழமை (11.05.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 166

# பீரங்கி, விமானத் தாக்குதல்களில் முல்லையில் நூற்றுக்கணக்கானோர் பலி!

## கூடாரங்கள், வீதிகளில் மீட்கப்படாத நிலையில் சடலங்கள்!!

கொழும்பு, மே 11

பாதுகாப்பு வலயமான வெள்ளமுள்ளிவாய்க்கால் பகுதியில், சனிக்கிழமை இரவு தொடக்கம் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணி வரை நடத்தப்பட்ட பீரங்கித் தாக்குதல் மற்றும் விமானத் தாக்குதல்களால் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டதாக இணையத்தளங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தாக்குதல்கள் நீண்ட நேரம் தொடர்ந்து நடத்தப்பட்டதால் பதுங்கு குழிகளிலும் தற்காலிக (கூடார) குடியிருப்புகளிலும் வீதிகளிலும் மீட்கப்படாத நிலையில் ஆயிரத்துக்கும் அதிகமானோரின் சடலங்கள் கிடப்பதாகவும் இணையத் தளங்கள் மேலும் தெரிவித்திருக்கின்றன.

சனிக்கிழமை இரவு 7 மணி முதல் பல மணித்தியாலங்களுக்குப் பீரங்கித் தாக்குதலும், ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு விமானத் தாக்குதலும் நேற்று இரவு 7 மணி தொடக்கம் ஷெல் தாக்குதலும் நடத்தப்பட்டதாகவும் இணையத்தளங்கள் மேலும் தகவல் வெளியிட்டுள்ளன.

இதேவேளை -

வெள்ளமுள்ளிவாய்க்கால் பகுதியில் சனிக்கிழமை இரவு முதல் நேற்றுக்காலை 9 மணிவரை நடத்தப்பட்ட ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களில் 106 சிறுவர்கள் உள்ளிட்ட 378 பேரின் சடலங்களும் 1,122 காயமடைந்தவர்களும் நேற்று பிற்பகல் 3.30 மணி வரை தமது வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டதாக முள்ளிவாய்க்கால் வைத்தியசாலையின் டாக்டர் வி.சண்முகராஜா பி.பி.ஸி. தமிழோசைக்குத் தெரிவித்தார்.

இத்தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருக்கலாம் எனக்கூறிய டாக்டர் சண்முகராஜா, காயப்பட்டவர்களின் அனுமானத்தின் பிரகாரம் ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர் எனவும் அவர்களின் சடலங்கள் வீதிகளிலும் வேறு இடங்களிலும் பதுங்கு குழிகளிலும் காணப்படு

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச அழுத்தத்தைக் கொண்டுவருவதற்காக விடுதலைப் புலிகள் கதை கட்டிவிட்டுள்ளனர்

### கோத்தபாய பி.பி.ஸிக்கு தெரிவிப்பு



கொழும்பு, மே11

சர்வதேச அழுத்தத்தைக் கொண்டு வருவது மற்றும் அரசாங்கத்தின் மீது அவதூறு ஏற்படுத்துவது ஆகிய நோக்கத்துக்காகவே மக்கள் பெரும் எண்ணிக்கையில்கொல்லப்படுவதாக விடுதலைப்புலிகள் பிரசாரம் செய்கிறார்கள்.

இறந்தவர்களின் எண்ணிக்கை 350, 200, 2000 என்று புரளிகளைக் கிளப்பி அவர்கள் கதைகட்டி விட்டுள்ளனர்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

முள்ளிவாய்க்கால் பகுதி மீது நேற்று நடத்தப்பட்ட பீரங்கித் தாக்குதல்களில் நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டதாக வெளிவந்த தகவல்கள் குறித்து பி.பி.ஸி. கேட்டபோது பதிலளிக்கையிலேயே பாதுகாப்புச் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இது குறித்து பி.பி.ஸிக்கு கூறியவை வருமாறு:-

கேள்வி: ஞாயிற்றுக்கிழமை 106 சிறுவர்கள் உட்பட 378 பேர் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டதாக செய்தி வந்துள்ளது. அந்தப் பகுதியில் கனரக ஆயுதங்கள் பயன்படுத்தப்படமாட்டாது, வான் வழித் தாக்குதல்கள் இடம்பெறமாட்டாது என்று அரசாங்கம் கூறியிருந்தும் இத்தகைய செய்தி வந்துள்ளது, இது பற்றி என்ன கூறுகிறீர்கள்?

(14 ஆம் பக்கம் பார்க்க)

## நெதர்லாந்தில் நேற்று ஆர்ப்பாட்டம்

டென்காக், மே 11

வன்னியில் நேற்றுமுன்தினம் பெருந்தொகையான மக்கள் கொல்லப்பட்டதைக் கண்டித்து நெதர்லாந்து டென்காக் அமைந்துள்ள அந்நாட்டு நாடாளுமன்றுக்கு முன்பாக நேற்று புலம்பெயர்ந்த தமிழர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

நெதர்லாந்தின் பல பாகங்களிலிருந்தும் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஆயிரக் கணக்கில் திரண்டு வந்து வன்னியில் நேற்று முன்தினம் பல நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

ஊடகங்கள் மூலமும் இணையத் தளங்கள் மூலமும் வன்னியில் இடம்பெற்ற படு

(14ஆம் பக்கம் பார்க்க)

## இளந்திரையன் காயமாம்

கொழும்பு, மே 11

வன்னியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் படுகாய மடைந்தார் என இணையத் தளத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆஸ்திரேலியா செய்திச் சேவையொன்றுக்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வன்னி மக்களின் நிலை தொடர்பாக பேட்டியளித்தார் என்றும் இணையத் தளங்களில் குறிப்பிடப்பிட்டிருக்கின்றன.

## இந்தியாவின் இராணுவ உதவிகளே புலிகளை அழிக்கப் பெரிதும் உதவின!

### அமெரிக்காவும் அதற்கு ஆதரவு என்கிறார் ரணில்

கொழும்பு, மே 11

''இலங்கை அரசுக்கு இந்தியா வழங்கி வரும் பெருமளவு இராணுவ ஒத்துழைப்புகளே விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு பெரிதும் உதவியாக இருந்தன. மிகவும் வலுவான நிலையில் இருந்த புலிகளை அழித்து ஒடுக்குவதற்கு அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளும் நல்ல ஆதரவை வழங்கி வருகின்றன.''

- இவ்வாறு வெளிப்படையாகத் தெரிவித்திருக்கின்றார் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

இந்தியாவின் 'ரைம்ஸ் நவ்' தொலைக்காட்சிச் சேவைக்கு வழங்கியுள்ள பேட்டியிலேயே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-



இலங்கையின் பாதுகாப்பு விடயத்தில் இந்தியாவும் ஏனைய அபிவிருத்தியடைந்த நாடுகளும் நான் பிரதமராக விருந்த காலத்திலிருந்து உதவிகளை வழங்கி வருகின்றன.

அதற்கு முன்னர் இவ்வாறான உதவிகள்

(14ஆம் பக்கம் பார்க்க)

## சோனியாவின் வருகைக்கு எதிராக கறுப்புக்கொடி; நெடுமாறன், பாரதிராஜா உட்பட 200 பேர் கைது!




சென்னை, மே 11

இலங்கைத் தமிழர் படுகொலையைத் தடுத்து நிறுத்தத் தவறிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி தமிழ் நாட்டிற்கு வாக்கு கேட்டு வருவதைக் கண்டித்து சென்னையில் 3 இடங்களில் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

இதில் கலந்துகொண்ட தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், இயக்குநர் பாரதிராஜா உட்பட 200இற்கும் அதிகமானோர் கைதுசெய்யப்பட்டனர்.

எனினும், கறுப்புக் கொடி போராட்டங்கள் நடைபெறவிருப்பதை அறிந்த சோனியா வீதி வழியைத் தவிர்த்து ஹெலிகொப்டர் மூலம் தீவுத்திடல் சென்றார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஆபத்தான நிலையில் உள்ள மக்களைப் பாதுகாக்க பாரபட்சமற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்

### விடுதலைப்புலிகள் நேற்றிரவு அறிக்கை

லண்டன்,மே 11

கடந்த காலங்களில் சர்வதேசப் பிரச்சினைகள் தோன்றிய போது ஐ.நாவும் சர்வதேச சமூகமும் எவ்வாறான நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டனவோ அதே போன்ற நடவடிக்கைகளை பாரபட்சமற்ற முறையில் இலங்கையிலும் மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பான எஸ்.பத்மநாதன் நேற்றிரவு விடுத்த

(14 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேற்றைய தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்கள், காயமடைந்தவர்களைப் படங்களில் காணலாம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 04 ★ 11 ★ 1939

உதிர்வு 11 ★ 04 ★ 2009

### திருமதி முத்துலிங்கம் செல்லம்மா

கடந்த 11.04.2009 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவியின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று 11.05.2009 திங்கட் கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் எமது உற் றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

469,நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.


Prossesor Pentium 1.6
LGA DDR II Mother Board } 2in1
Hard Disk 80 GB SATA
RAM DDR II 1 GB 800
Samsung 22 X DVD Writer
ATX Black Casing
17" HP CRT Pure Flat Monitor
Key Board
Optical Mouse
Multimedia Speaker
Free... Pen Drive Dust Cover Mouse Pad
32000/-
Package 1

Prossesor Pentium 2.2 DuoCore
FoxConn G 31 Mother Board
Hard Disk 160 GB SATA
RAM DDR II 1 GB 800
LG 22 X DVD Writer
ATX Black Casing
17" HP CRT Pure Flat Monitor
Key Board
Optical Mouse
Multimedia Speaker
Free... Pen Drive Dust Cover Mouse Pad
39500/-
Package 2

Prossesor Pentium 2.2 DuoCore
FoxConn G 31 Mother Board
Hard Disk 160 GB SATA
RAM DDR II 1 GB 800
Samsung 22 X DVD Writer
ATX Black Casing
16" LCD Monitor
Key Board
Optical Mouse
Multimedia Speaker
Free... Pen Drive Dust Cover Mouse Pad
44000/-
Package 3

Prossesor Pentium 2.2 DuoCore
Asus P5GCMX Mother Board
Hard Disk 250 GB SATA
RAM DDR II 1 GB 800
Samsung 22 X DVD Writer
ATX Black Casing
17" LCD Wide Screen Samsung Monitor, Key Board, Optical Mouse
Multimedia Speaker, UPS 650 W
51500/-
Package 4

Prossesor Pentium 2.2 DuoCore
Intel DG 31 Mother Board
Hard Disk 160 GB SATA
RAM DDR II 2 GB 800
Samsung 22 X DVD Writer
ATX Black Casing
17" LCD Wide Screen Samsung Monitor
Key Board, Optical Mouse
Multimedia Speaker, UPS 650 W
53000/-
Package 5

Prossesor Pentium 2.66 Core2Duo
Intel DG 31 Mother Board
Hard Disk 500 GB SATA
RAM 2 GB + 2 GB = 4 GB 800
Samsung 22 X DVD Writer
ATX Black Casing
22" LCD Wide Screen Monitor
Creative 5.1 Subwoofer
Sound Card 5.1 3D
Geforce512 MB VGA Card
Modem 56K
Key Board, Optical Mouse
Multimedia Speaker
UPS 1200 W 1.2 Kv
(Dual UPS - Power Tree)
99000/-
Package 6

* Warranty Value 1-3 years

MUSIC WORLD & COMPUTERS
141 B, பலாலி வீதி, கலட்டி சந்தி, திருநெல்வேலி.
தொலைபேசி/கைபேசி: 021 222 6654
(ஞாயிறு,விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)

* Stock Available


# பிரியங்கா-நளினி சந்திப்புக்கு பின்னரே ஈழத்தமிழர்கள் மீது தாக்குதல் உக்கிரம்

## அப்படி என்னதான் பேசினார்கள்? - ஜெயலலிதா கேள்வி!





சென்னை, மே 11

வேலூர் சிறையில் இருக்கும் நளினியை பிரியங்கா காந்தி சந்தித்த பின்னரே இலங்கையில் தமிழர்கள் மீது இராணுவத் தாக்குதல் தீவிரமடைந்துள்ளது.

எனவே, இந்தச் சந்திப்பில் நடந்தது என்ன என்பது குறித்து முதல்வர் கருணா நிதி விளக்கம் அளிக்க வேண்டும் என அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.

ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் போட்டியிடும் பா.ம.க. வேட்பாளர் ஏ.கே.மூர்த்தியை ஆதரித்து பல்லாவரத்தில் சனிக்கிழமை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜெயலலிதா அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேர்தல் தோல்வி பயம் காரணமாக மருத்துவமனையில் முடங்கியுள்ள நிலையில், தனி ஈழம் பெற்றுத் தர முயற்சிப்போம் எனக் கருணாநிதி சொல்கிறார். ஆட்சி அதிகாரத்தில் இருந்த போது இதனைச் செய்யத் தவறிய அவர் தேர்தலில் தோல்வி பயம் ஏற்பட்டவுடன் தனி ஈழம் பேசுவது மக்களை ஏமாற்றும் வேலை.

இலங்கை இராணுவத்துக்கு இந்திய அரசு ஆயுத உதவி செய்த போதும், இலங்கை இராணுவ வீரர்களுக்கு இங்கு பயிற்சி அளித்த போதும் மத்திய அரசில் இருந்த தி.மு.க அதனைத் தடுக்கவில்லை.

வேலூர் சிறையில் இருக்கும் நளினியை, ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்கா சந்தித்த தன் மர்மம் என்ன? இதற்கு யார் அனுமதி அளித்தது? இருவரும் என்ன பேசினார்கள்? இது குறித்த விவரங்களை வெளியிடாமல் முதல்வர் கருணாநிதி மௌனம் சாதித்தது ஏன்?

நமக்கு இப்போது ஏற்பட்டுள்ள பலத்த சந்தேகம் என்னவென்றால், இந்த சந்திப்புக்குப் பின்னரே, இலங்கையில் தமிழர்கள் மீதான இராணுவத் தாக்குதல் தீவிரமடைந்துள்ளது என்பதுதான். இந்த சந்திப்பு குறித்து முதல்வர் கருணாநிதி விளக்கம் அளிக்க வேண்டும் - என்றார் ஜெயலலிதா.

(அ-சி)

## பாதீனியம் அழிப்பு நவக்கிரியில் தீவிரம்

கோப்பாய், மே11

நவக்கிரி கிராம அலுவலர் பிரிவில் வலி.கிழக்கு பிரதேச சபையினரும், எல்லாளன் சனசமூக நிலையமும் இணைந்து இப்பகுதியில் பாதீனியம் களைகளை முற்றாக அழிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

இச் செயற்பாட்டின் அடிப்படையில் இம்மாதம் 31ஆம் திகதிக்குள் பொதுமக்கள் மற்றும் சமூக அமைப்புக்களின் உதவியோடு இத்திட்டம் பூர்த்தி செய்யப்படவுள்ளது.

இது பற்றிய அறிவுறுத்தல்கள் ஒலிபெருக்கிகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் மூலம் விடுக்கப்பட்டுள்ளதாகவும் இத்திட்டத்திற்கு பொதுமக்களை முழு ஒத்துழைப்பு நல்குமாறும் நடைமுறைப்படுத்தாத பொதுமக்கள் மீது தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதேச சபையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

(1-72)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



21.04.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் மாணிக்கவாசகப்பிள்ளை கனகசபை

(ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நாளை (12.05.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் இந் நிகழ்விலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

* இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும். *

புலவனார் வீதி,
கல்வியங்காடு.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி ஆதிபுவனேஸ்வரி செல்வராசா

(ஓய்வு பெற்ற ஆசிரியை, யாழ்.கல்வயல் சண்முகானந்தா வித்தியாசாலை)



கல்வயல், சாவகச்சேரியை சொந்த இடமாகவும் கோப்பாய் மத்தியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஆதி புவனேஸ்வரி செல்வராசா (08.05.2009) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி பொன்னம்பலம் தம்பதியரின் அன்பு மகளும் து.செல்வராசாவின் (ஓய்வுபெற்ற அதிபர், யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்) பாசமிகு துணைவியும், திருமதி மலர்விழி (ஆசிரியை, கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி), காலஞ்சென்ற இளங்கோ மற்றும் திருமதி கயல்விழி(ஆசிரியை, யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), திருமதி வேல்விழி (லண்டன்), காலஞ்சென்ற இளங்குமரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், க.சேய்ந்தன் (ஆசிரியர், கொ/பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), கா.ஜெயந்தன் (ஆசிரியர், யாழ்.கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), க.ஸ்ரீதரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், திருமகன், கபிலன், பிரணவி, கஜந்தன், விசாகன், ஷாம்பவி, அபிராமி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2009) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கந்தன்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

தகவல்:
து.செல்வராசா(கணவர்).

## தேவை


கல்பேட், ஊர்ச்சேவல், ஊர்க்கோழிகள் நியாயமான விலையில் கொள்வனவு செய்யப்படும்.
இல. 158/4, [illegible]
கோயில் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மன்மோகன் சிங் - கலைஞர் கூட்டணிக்கு தமிழகத்தில் நல்ல பாடம் காத்திருக்கின்றது

பல்லாயிரக்கணக்கில் ஈழத் தமிழர்கள் யுத்த பூமியில் கொத்துக் கொத்தாகப் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கையில், இந்திய அரசின் தலைமைப் பொறுப்பை வகிக்கும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் சென்னைக்கு வந்து தெரிவித்த விட்டேத்தியான கருத்துகள் ஏற்கனவே இவ்விடயத்தில் விசனமுற்றுக் கொதித்துப் போயிருக்கும் தமிழகத்தை மேலும் சீற்றமுற வைத்திருக்கின்றன.

இவ்வளவு போரியல் கொடூரமும் தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கையில் இன்னமும் 'ஈழத் தமிழர்களின் பாதுகாப்பே எமக்கு முன்னுரிமைக்குரிய விடயம், அதற்குத்தான் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்' என வாயால் - வெறும் பேச்சளவில் - இந்தியப் பிரதமர் பூச்சுற்றிக்கொண்டிருப்பது வெட்கக் கேடான - நகைப்புக்கிடமான - விடயமாகும்.

இந்திய உபகண்டம் என்ற பெரிய ஒரு தேசத்தின் பிரதமர் தாம் என்பதையும், அந்தத் தேசத்தின் பிரதான மாநிலங்களுள் ஒன்றான தமிழகத்துடன் தொப்புள் கொடி உறவு கொண்டுள்ள ஈழத் தமிழர்களைக் கொடூரமாக நடத்தும் - அருகில் உள்ள - ஒரு சிறிய தீவுத் தேசத்து அரசுடன் தாம் விடயங்களைக் கையாள்வது குறித்துப் பேசுகின்றார் என்பதையும், அத்தகைய தீவில் ஆட்சிக் கட்டில் இருக்கும் பௌத்த - சிங்களப் பேரினவாத அரசினால் சிறுபான்மையினரான தமிழர்கள் கொன்றொழிக்கப்படுவது கண்டு, தனது தமிழக மாநில மக்கள் கொதித்துப் போயிருக்கின்றமையை ஒட்டி அவர்களை சாந்தப்படுத்த - ஆற்றுப்படுத்த - வேண்டிய கடப்பாட்டுடன் தாம் பேசுகின்றார் என்பதையும் அடியோடு மறந்து சென்னையில் கருத்து வெளியிட்டிருக்கின்றார் போலும் பிரதமர் மன்மோகன் சிங்.

நேற்றும் கூட, முல்லைத்தீவில் அப்பாவித் தமிழ் மக்கள் பல நூற்றுக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டமை பற்றிய தகவல் தமிழகத்தை அதிர்ச்சியில் ஆழ்த்தும் விதத்தில் அங்கு பரவிக் கொண்டிருந்தது.

அப்படியிருக்கையில் -

யுத்த முனையில் இலங்கை அரசுப் படைகள் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தவேயில்லை என்றும், ஈழத் தமிழர்களின் பாதுகாப்புக்கே தமது அரசு முக்கியத்துவம் கொடுத்துச் செயற்படுகின்றது என்றும் தமிழக மக்களின் காதில் பூச்சுற்றிக் கொண்டிருக்கின்றார் இந்தியப் பிரதமர்சிங்.

ஓர் இனவழிப்புக் கொடூரம் பெரும் சம்ஹாரமாய் அரங்கேறிக் கொண்டிருக்கையில் அது இன்னொரு நாட்டு விடயம், அந்தத் தேசத்தின் இறைமைக்கு உட்பட்ட விவகாரம் என்றெல்லாம் குறிப்பிட்டு, பொறுப்பைத் தட்டிக் கழிப்பது என்பது, அயலில் உள்ள தேசத்தின் - நீதியை நிலைநாட்ட வேண்டிய தரப்பின் - பெரும் குற்றமாகும். மேற்படி இனவழிப்புக் கொடூரத்துக்குத் துணைபோகும் செயல் இது என்பதை இந்தியப் பிரதமருக்குச் சுட்டிக்காட்டுவது பொருத்தமானதாகும்.

1970 களில் கிழக்குப் பாகிஸ்தானில் மேற்குப் பாகிஸ்தான் இத்தகைய அராஜகங்களைப் புரிந்தபோது, அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி பாரத இராணுவத்தை கிழக்குப் பாகிஸ்தானுக்குள் அனுப்பி பாகிஸ்தான் தேசத்தைப் பிளந்து, பங்களாதேஷ் என்ற புதிய தேசத்தை உருவாக்கி, கிழக்குப் பாகிஸ்தான் மக்களின் உரிமைகளை உறுதி செய்தார்.

பாகிஸ்தான் தேசம் என்ற கட்டமைப்பின் இறைமையைக் கட்டிப்பிடித்துக்கொண்டு, கிழக்குப் பாகிஸ்தான் மக்களைப் பிரதமர் இந்திராகாந்தி நட்டாற்றில் விடவில்லை. அந்த மக்களின் சுயநிர்ணய உரிமையையும் தனித்துவ இறைமையையும் தமது படைகள் மூலம் உறுதி செய்து நிலைநிறுத்தினார் அன்னை இந்திரா.

அதே இந்திரா காந்தியின் அகில இந்திய காங்கிரஸ் கட்சி சார்பில் இன்று பிரதமராக இருக்கும் மன்மோகன் சிங், இந்திரா காந்தியின் தீர்க்கதரிசனம் மிக்க- துணிச்சலான - நீதி, நேர்மையான - தீர்க்கமான - தீர்மானம் பற்றியும் அதன் பெறுபேறுகள் குறித்தும் அறியாமல் பேசுகின்றார் போலும்.

ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையையும் தமிழர் தேசத்தின் இறைமையையும் தமிழர் தாயகத்தையும் தனது அதிகார ஆட்சிக்குள் அடிமைப்படுத்தி வைத்திருக்கும் கொழும்பு அரசு குறித்தும் தனக்கு உள்ளதாகக் கொழும்பு குறிப்பிடும் இறைமை குறித்தும் மட்டுமே கவலை கொள்கின்றார் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்.

அதற்கு அப்பால், ஈழத் தமிழர்கள் பால் உள்ள நியாயங்கள், அவர்களின் உரிமைகள், கருத்துகள் போன்றவற்றைக் கவனத்தில் எடுக்காது - வழமையான காங்கிரஸ் வாதிகள் போன்றே - நடந்து கொள்கின்றார் இந்தியப் பிரதமர் மன்மோகன்.

ஈழத் தமிழர்களின் பேரவலங்களையும், அது விடயத்தில் பொறுப்புடன் செயற்படத் தவறிய புதுடில்லி மற்றும் சென்னை அரசியல் தலைமைகள் தொடர்பாகத் தமிழக மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் பெரும் சீற்றம் குறித்தும், இவ்விவகாரத்தில் தமது அரசு ஈழத் தமிழர்களுக்கு இழைத்த பெருங் கொடூரத்தின் ஆழம் குறித்தும் கருத்தில் கொள்ளாது உதாசீனப் போக்கில் இந்தியப் பிரதமர் சென்னையில் நேற்று முன்தினம் கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார்.

இந்தப் பெரும் தவறின் விளைவை, இன்னும் இரண்டு நாள்களில் தமது வாக்குகள் மூலம் தமிழக மக்கள் நல்ல பாடமாக இந்தியப் பிரதமருக்கும் அவரது காங்கிரஸ் கட்சிக்கும் புகட்டுவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

பாவம், அவரது அரசுடன் கூட்டணி அமைத்து ஈழத் தமிழருக்கு எதிரான இக்கொடூரங்களுக்குத் துணை போனமைக்காக தமிழகத்தின் ஆளும் தி.மு.க. கட்சியினரும், அவர்களின் கட்சியின் தலைவரான தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியும் கூட நல்ல பாடம் படிக்க வேண்டிய நிலைக்கு உள்ளாவார்கள் என்பதுதான் பரிதாபத்துக்குரியது.

# படகில் புறப்பட்ட 21 பேரில் 10பேர் இறந்தனர் உயிர்தப்ப முயன்றவர்களுக்கு ஏற்பட்ட நிலைமை

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் 10.05.2009அன்று வெளியான அரசியல் விமர்சனத்தில் இருந்து ஒரு பகுதி.

கடந்த வியாழக்கிழமை கொழும்பில் உள்ள ராஜதந்திரிகள் கூட்டமொன்றில் பேசுகையில் ஜனாதிபதீ ராஜபக்ஷ கூறினார் இந்த நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தலைத்தூக்குவதை தாம் விரும்பவில்லையென்று. இன்று ஜனாதிபதி ஜோர்டானுக்குப் புறப்பட்டு போகவிருக்கிறார். ஈரான், லிபியா நாடுகளுக்கு பின் மூன்றாவது அரபு நாடாக ஜோர்டான் பயணம் அமைகின்றது.

ஜனாதிபதிக்கு தொடர்ச்சியாக மேற்கு நாட்டுத் தலைவர்களிடமிருந்து வந்து கொண்டிருக்கும் தொலைபேசி அழைப்புக்களைத் தவிர்ப்பதற்காக அவர் வெளிநாடு செல்வதாகச் சிலர் கூறுகிறார்கள்.

நாடு திரும்பும் போது மேலும் பல சுவையான தகவல்கள் போர் முனையிலிருந்து கிடைக்கும் என்று அவர் எதிர்பார்த்திருப்பார் என்று வேறு பலர் நினைக்கிறார்கள்.

### அகதிகளின் பயங்கரக் கடல் பயணம்

'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகையில் கோமினி செங்குப்தா என்பவர் தந்திருக்கும் சில தகவல்களை இங்கு பார்க்கலாம்.

அந்தப் பயணிகள் படகு இந்து சமுத்திரத்தில் ஒன்பது நாள்கள் திசை தவறிப் போய்க்கொண்டிருந்துள்ளது. ஜெயநிரஞ்சனாவின் 3 வயதுக் குழந்தை இறந்து போய்விட்டது. எம். யேசுதாஸ் என்பவர் தனது தந்தை, சகோதரி, மச்சான், சகோதரர்கள்,மாமன் என்று மொத்தம் ஆறு பேரை இழந்து விட்டார். எட்டு மாதக் குழந்தையான குபேரன் உயிர் தப்பியிருந்ததற்குக் காரணம் அதன் தாய் இறப்பதற்கு சிலமணி நேரம் இருக்கும் வரை குழந்தைக்கு தன் மார்பில் பாலூட்டியிருந்தமையே.

கடந்த வாரம் புதன்கிழமையன்று இந்த இலங்கை அகதிகளை ஏற்றி வந்த படகு இந்தியக் கடல் பகுதியை அடையும் போது அதிலிருந் 21 பேரில் 10 பயணிகள் இறந்துவிட்டார்கள் அல்லது படகிலிருந்து கடலில் குதித்து விட்டிருந்தார்கள். அவர்களிடம் உண்பதற்கு எதுவுமே இருக்கவில்லை. குடிப்பதற்கு உப்புத்தண்ணீர் மட்டுமே இருந்தது. கடும் சூரியஒளி தலையில் தாக்கிக்கொண்டிருந்தது. வயிற்றோட்டமும் தொடங்கியிருந்தது. ஏப்ரல் 24 ஆம் திகதி முதல் குழந்தை இறந்தது. பிறகு மற்றவர்கள். எஸ்.இந்திரமீனன் என்பவர் கொச்சசையான ஆங்கிலத்தில் பின்வருவதை விவரித்தார். ஒன்றன்பின்ஒன்றாக குழந்தைகள் செத்தன, சாப்பாடு இல்லை,குடிக்க தண்ணீரும் இல்லை. 24,25,26 ஆம் திகதிளில் ஒன்றுக்குப் பின் ஒன்றாக செத்தார்கள்.''

இதுதான் அவர்களின் பயணத்தின் கதை. அவர்கள் நாட்டின், உள்நாட்டு போரின் கதை. தமிழ்த் தீவிரவாதிகள் மீது இலங்கைப் படைகள் தமது கடைசி மோதலை தொடுத்துக் கொண்டிருக்கும் வேளையிலும் இந்தப் போர் முடிவுறுவதாகத் தெரியவில்லை.

இலங்கையின் மூலையொன்றில் 4மைல் நிலப்பகுதியில்தமிழ்ப் போராளிகள் மீது இலங்கை ராணுவம் தனது கடைசிஅழுத்தத்தைப் பிரயோகித்துக் கொண்டிருக்கிறது. இப்பகுதியில் சிக்குண்டுள்ள சுமார் 50 ஆயிரம் பொதுமக்களின் பாதுகாப்பையொட்டிப் போரை நிறுத்தும்படி சர்வதேச நாடுகள் பலவும் கொடுத்து வருகின்ற கடும் நெருக்குதலை இலங்கை அரசு உதாசீனம் செய்துவிட்டது.

போர் தீவிரமடைந்தமையால் அந்த படகு கரையை விட்டு புறப்பட்டது. அது இரவு நேரம். கடலுக்குள் படகை செலுத்திச் சென்றார்அதன் கப்டன், ஆனால்அவருக்கு திசைப் புலப்படவில்லை. பாதையை இழந்து விட்டார். ஒன்பது மணிநேரத்தில் இந்தியக் கரையை அடைந்து விடலாம் என்று பிரயாணிகளிடம் கூறியிருந்தார். ஆனால் இந்தநேரத்தில் படகின் என்ஜின் பழுதடைந்து விட்டது. 9ஆம் திகதி பகல் வேளை கப்டன் கடலுக்குள் குதித்துவிட்டார். குற்ற உணர்வினாலோ வேறு எதனாலோ தெரியவில்லை. இந்திய ஆஸ்பத்திரி ஒன்றில் எஞ்சியவர்கள் இப்போது சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

### பிரபாகரனின் வாழ்விடம்

மிகப் பாதுகாப்பான, கொங்கிரீட் மேல்தளம், சுற்றுமதில்களுடன் கூடிய விடு தலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் வாழ்விடம் மார்ச் 30ஆம் திகதியுடன் இல்லாமல் போய் விட்டது பலருக்குத் தெரியாது.

இதே கதிதான் ஏனைய பாதுகாப்பான கோட்டை போன்ற கட்டடங்களுக்கும் நேர்ந்துள்ளது.போர்நிறுத்த காலகட்டத்தில் வன்னிப் பகுதிக்கு எடுத்துவரப்பட்ட தொகை, தொகையான சிமெந்து மூடைகள் எதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை இந்தக் கட்டடங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

முன்னேறிச் சென்ற இராணுவம் பிரபாகரன் தங்கியிருந்த ஒரு கட்டடத்தில் மிக முக்கியமானதொரு அல்பத்தைக் கண்டெடுத்தது. அது அவருடைய குடும்ப புகைப்பட 'அல்பம்', அவருடைய பிறப்புசான்றிதழ், ஜாதகக் குறிப்பு, கல்விச்சான்றிதழ் வேறும் பல ஆவணங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவை அனைத்தும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன. *

# எல்லாமே முடிவுற்ற பிறகுதானா பான்கி மூன் இலங்கை செல்வார்?

## ஐ.நா.பிரமுகர்கள் கருத்து மோதல்

நியூயோர்க், மே.11

ஐ.நா.செயலாளர்நாயகம் பான்கி மூன் இலங்கைக்கு போகவேண்டுமா என்பது குறித்து ஐ.நா.வில் இருவிதமான கருத்து நிலவுவதாக செயலாளர் நாயகத்தின் சிரேஷ்ட ஆலோசகர் ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையில் நிலைமை சீராகியதன் பின்னர் செயலாளர் நாயகம் அங்கு விஜயம் செய்வது மிகவும் பயனுள்ளதாகவிருக்கும் என்று அவர் கூறினார். இலங்கை இராணுவம் தனது இறுதித் தாக்குதலை நடத்தியதன் பின்னர் என்பதையே அவர் இவ்வாறு குறிப்பிட்டதாகத் தெரிகின்றது.

செயலாளர்நாயகத்தின் அலுவலர்கள் பல்வேறு தரப்புகளுடன் பேச்சுக்கள் நடத்தியிருக்கிறார்கள். அவர்களில் பிரிட்டனிலுள்ள தமிழர்களும் அடங்குவார்கள். மோதல் நடக்கும் இடங்களிலிருந்து வெளியேற விரும்புகிறவர்களை அனுமதிக்கும்படி தமிழீழ விடுதலைப்புலிகளை வற்புறுத்தும்படி பிரிட்டனிலுள்ள தமிழர்களை அவர்கள் கேட்டுக்கொண்டதாக அவர் தெரிவித்தார். ஆனால் அவ்வாறு அவர்களால் செய்யமுடியாதிருக்கிறது என்றும் கூறினார் பான்கிமூனின் ஆலோசகர்களில் ஒருவர்.

பான்கிமூன் அங்கு செல்வதற்கு இறுதித் தாக்குதல் முடிவுறும்வரை காத்திருப்பதானால் அது அழிந்துபோன ஒரு பிரதேசத்திற்கு மேற்கொள்ளப்படும் பயணம் ஒன்றாகவே இருக்கும் என்று 'இன்னர் சிற்றி பிரஸ்' சுட்டிக் காட்டியபோது, பான்கிமூனின் ஆலோசகர் அதனை ஒப்புக்கொண்டார். மக்கள் ஐந்தாண்டு காலத்துக்கு தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டிருப்பார்கள் என்றும் அவர் கூறினார்.

ஐ.நா. நிதியுதவியில்மக்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பது தடுப்பு முகாம்கள் என்று ஐ.நா. அதிகாரிகளுக்குத் தெரியுமானால் நிச்சயமாக அதில் மாற்றம் ஏற்படுத்தியாக வேண்டும் என்று சிலர் கூறுகிறார்கள். ஆகவே பான்கி மூன் இப்பொழுதே அங்கு போகவேண்டும். தம்முடன் பத்திரிகையாளர்களையும் கூட்டிச் செல்லவேண்டும். போர் நடக்கும் பகுதிகளைப் போய்ப் பார்க்க அனுமதிக்கும்படி கேட்கவேண்டும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

தமிழீழப் புலிகளின் தலைவர் ஏற்கனவே தப்பியிருக்கக்கூடும் என்று செயலாளர் நாயகத்தின் ஆலோசகர் கருதினார்.

போர் நடக்கும் பகுதிகளுக்கு விமானம் மூலம் உணவு மற்றும் பொருள் பொதிகளைப் போடவேண்டும் என்று பிரிட்டிஷ் தமிழர்கள் கேட்கிறார்கள். ஆனால் ஐ.நா. 'கவ்போய்' மாதிரி நடந்துகொள்ள முடியாது என்று அவர் மேலும் சொன்னார்.

### ஜப்பானிய தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்

கடந்த வெள்ளியன்று ஐ.நா. விலுள்ள ஜப்பானிய தூதரகம் முன்னால் தமிழர்களின் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

வெட்கம்- ஜப்பான் வெட்கப்பட வேண்டும் என்றவாறு மக்கள் கோஷமிட்டுள்ளார்கள்.

இலங்கை அரசுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்கப்போவதாக தூதுவர் யசூசி அகாஷி உறுதியளித்திருப்பதை அவர்கள் கண்டித்தார்கள்.

### முகாமில் நடந்த சம்பவம்

நலன்புரி முகாம் ஒன்றில் காணாமல் போன இளம் பெண் ஒருவர் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார் என்று கூறப்படும் செய்தி பற்றியும் தொலைக்காட்சியில் படங்கள் வெளியானது பற்றியும் ஐ.நா பேச்சாளரிடம் 'இன்னர் சிற்றி பிரெஸ்' கேள்வியெழுப்பியது.

பத்திரிகை அறிக்கைகள் தொடர்பாக நான்கருத்து வெளியிடுவதில்லை. செயலாளர் நாயகமும் அதனைப் பார்த்திருக்கிறாரா? என்பது தெரியவில்லை என்றார் பேச்சாளர். (ப)

| நாளை | |
|---|---|
| சித்திரை 29 | 12.05.2009 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | திருதியை |
| | பி.ப. 01.51 வரை |
| நட்சத்திரம்: | கேட்டை |
| சுபநேரம்: | 10.24 - 11.54 |
| ராகுகாலம்: | 02.54 - 04.24 |

# மிருசுவில் நலன்புரி நிலையத்தில் கல்விச் செயற்பாடு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 11

மிருசுவில் நலன்புரி முகாமில் தங்கியிருக்கும் மாணவர்களின் கற்றல் வசதி கருதி பாடசாலை ஒன்று இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை வளாகத்தில் மேற்படி பாடசாலை இன்று சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளதாக மேலதிக மகாண கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான இந்தப் பாடசாலை திறந்து வைப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

(1-224)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் அடுத்தவாரம் இலங்கை வருகை

கொழும்பு,மே.11

ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவொன்று அடுத்த வாரம் இலங்கை வரவிருப்பதாக வெளிநாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தற்போதைய தலைமைத்துவம் அடுத்து வரவிருக்கும் தலைமைத்துவம் மற்றும் ஐரோப்பிய ஆணைக்குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்தக்குழுவில் அங்கம் வகிக்கவிருக்கின்றனர்.

இலங்கையின் அரசியல்,மனித உரிமைகள்,மனிதாபிமான நிலைவரங்கள்,வர்த்தக மற்றும் அபிவிருத்தி உதவிகள் மற்றும் இருதரப்பு உறவுகள் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் குறித்து இவர்களுடன் பேசப்படவிருப்பதாக வெளிநாட்டமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (50)

## கண்ணீர் அஞ்சலி

யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பாடசாலையின்
ஆசிரியை காந்தரூபி அவர்களின் தந்தை

**செ.கந்தையா**

அவர்களின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவிப்பதுடன் ஆத்ம சாந்திக்காகவும்
பிரார்த்திக்கின்றோம்.

யா/நல்லூர் ஸ்தான
சி.சி.த.க.பாடசாலை. **அதிபர், ஆசிரியர்கள்.** (85188)

## கண்ணீர் அஞ்சலி



காங்கேசன் மண்ணின் கல்விக்
கலங்கரை விளக்காம் நடேஸ்வராக்
கல்லூரியின் கடமை தவறாத
'லிகிதர்' பன்னெடுங்காலம்
கடமையாற்றிய

அமரர்

**பாலாத்தை வைத்திலிங்கம்**

அவர்களுக்கு எங்கள் மனம்
நெகிழ்ந்த அஞ்சலிகள்.

**பழைய மாணவர்கள்**
**நடேஸ்வராக் கல்லூரி**
(85181)

## மரண அறிவித்தல்கள்

### அம்பலம் தங்கவேல்

(முன்னாள் ஊழியர், காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம்)



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் மந்திகையை வதிவிடமாகவும் கொண்ட அம்பலம் தங்கவேல் 08.05.2009 வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் சின்னப்பிள்ளையின் (இராசமணி) அன்புக் கணவரும் கிருஸ்ணலதாவின் (ஆசிரியை) அன்புத் தந்தையும், சங்கரின் மாமனாரும், அடலின் பேரனும், அன்னம்மா, கனகமணி, பருவதபாக்கியம் ஆகியோரின் சகோதரரும், இன்பராஜின் மாமனும், சிவஞானசுந்தரம், சிறீஸ்கந்தராசா, சிறீரங்கநாதன், புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (10.05.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணியளவில் கொடிகாமம் வீதி,மந்திகை முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
புலோலி, தெற்கு,
மந்திகை. (சி/556080) **த.இராசமணி** (மனைவி).

### திருமதி நடராஜா கண்மணி



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராஜா கண்மணி 08.05.2009 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீதேவன் - தம்பிமுத்து தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குஞ்சுப்பிள்ளை - தம்பிராசா தம்பதியினரின் அன்பு மருமகளும், நடராஜாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும், பத்மலோஜினி, பிறேமதாஸ், ரகுதாஸ் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஞானதேவன், கலாசோதி, றொசானி ஆகியோரின் அன்பு மாமியாரும் கீர்த்திகன், பரிதி, துஷித், ஹரிசாந், சயானி , லதுசன், ஹலக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், கந்தவனம் (ஆசிரியர்), செல்வரட்ணம் (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.05.2009) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 2 மணிக்கு தகனக் கிரியைக்காக ஏழாலை ஆலங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஏழாலை வடக்கு, நடராஜா (கணவர்),
ஏழாலை: (85187) பிள்ளைகள்.

# யுத்த நிறுத்தக் கோரிக்கை நிராகரிப்பு; கனேடிய அரசாங்கமும் கவலை தெரிவிப்பு

இலங்கை அரசு யுத்த நிறுத்தத்தை ஏற்றுக்கொள்ள மறுப்பதும் மற்றும் மனிதாபிமான அமைப்புகளை மக்களுக்கு உதவுவதற்கு அனுமதி அளிக்க மறுப்பதும் கவலை அளிக்கிறது என கனடாவின் வெளிவிவகார அமைச்சர் லோறன்ஸ் கனோன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நான் ஏமாற்றம் அடைந்துள்ளேன். நாங்கள் பல மாதங்களாக யுத்தநிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்துள்ளோம். பொதுமக்களுக்கு அடிப்படைத் தேவைகளும் மருத்துவ உதவிகளும் கிடைக்கவேண்டும் எனத் தெரிவித்து வந்துள்ளோம்-என்றும் கனடாவின் வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

''அரச படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தம் காரணமாக அப்பாவிப் பொதுமக்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என்றும் அவர் கவலையுடன் குறிப்பிட்டார்.

வன்னியில் அல்லலுறும் அப்பாவிப் பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைத் தடையின்றிப் பூர்த்தி செய்யக்கூடிய ஓர் சூழ்நிலை உருவாக்கப்படவேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஐக்கிய நாடுகள் சபை மற்றும் முக்கிய நாடுகள் விடுத்த யுத்த நிறுத்தக் கோரிக்கையை இலங்கை ஜனாதிபதி நிராகரித்த சில மணித்தியாலங்களின் பின்னர், கனேடிய வெளிவிவகார அமைச்சர் லோரன்ஸ் கனோன் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார். (சி)

# வாழ்வாதார மேம்பாடு தொடர்பான பயிற்சி

கோப்பாய், மே.11

வலி-கிழக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் கெயர் நிறுவனத்தால் வாழ்வாதார மேம்பாடு தொடர்பான பயிற்சித் திட்டத்தின் கீழ் 6 கிராமசேவையாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட சனசமூக நிலைய நிர்வாகிகளுக்கு கடந்த வியாழக்கிழமை பிரதேச சபை தலைமைப் பணிமனையில் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டுள்ளது.

கோப்பாய் வடக்கு - காந்தி சனசமூக நிலையம், உரும்பிராய் வடக்கு நவசக்தி சனசமூகநிலையம், உரும்பிராய் தெற்கு - அண்ணா சனசமூகநிலையம், இருபாலை கிழக்கு - அன்னை சனசமூக நிலையம், இருபாலை தெற்கு - கலைவாணி ச.ச. நிலையம், வாதரவத்தை - கணேஸ்வரன் ச.ச.நி ஆகியவற்றின் நிர்வாகிகளே கலந்து கொண்டனர்.

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் சேமிப்புக்கடன் வழங்குதல், வருமான ஊக்குவிப்புத்திட்டம், உட்கட்டுமான அபிவிருத்தி போன்ற வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல் பற்றியும் சமூக உறவுகளை மேம்படுத்துதல், அனர்த்த முகாமைத்துவம் ஆகிய விடயங்கள் தொடர்பாகக் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கெயர் பிரதித்திட்டப் பணிப்பாளர், பிரதேச சபைச் செயலாளர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், உள்ளூராட்சி உதவியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர். இப்பயிற்சிப் பட்டறையில் 30 பயனாளிகள் கலந்துகொண்டனர். (203-72)

# கரம் சுற்றுப்போட்டி

வடமராட்சி, மே 11

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 15,19 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான கரம் சுற்றுப்போட்டி இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க்கிழமையும் காலை 8.30 மணிக்கு வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

போட்டிகள் 2 தனிநபர் ஆட்டங்கள் மற்றும் ஒரு இரட்டையர் ஆட்டங்களையும் கொண்டதாகும். பங்குபற்றும் பாடசாலைகள் தங்களுக்குரிய கரம் பலகையுடன் சமுகம் தரவேண்டும் என வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வே.வல்லிபுரம் அறிவித்துள்ளார்.

இந்தச் சுற்றுப் போட்டியில் வெற்றி பெறும் முதல இரு பாடசாலைகளும் மாவட்டப் போட்டியில் பங்குபற்ற முடியும். மாவட்ட மட்ட கரம் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 13ஆம், 14ஆம் திகதிகளில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளன. இதில் பெண்களுக்கான போட்டி 13ஆம் திகதியும் ஆண்களுக்கான போட்டி 14ஆம் திகதியும் இடம்பெறும். (1-236)

**அறைகள் வாடகைக்குண்டு**
உணவுவசதிகளுடன்கூடிய அறைகள், ஆண்மாணவர்களுக்கும்,
உண்டு.மிகச்சிறிய குடும்பத்திற்கான anex உள்ளது.
0779573244, 0776357703

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு 10 மில்லியன் டொலர்களை அவுஸ்திரேலியா வழங்கியது


சிட்னி,மே.11

வடக்கில் மோதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவும் வகையில் அவுஸ்திரேலியா 10 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது.

அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஸ்டீபன்ஸ்மித் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில்,''ஐ.நா.முகவர்கள் ஊடாக இந்த நிதி வழங்கப்படும்.'' என்று தெரிவித்தார்.நீர்,சுகாதார இருப்பிடம், உணவு மற்றும் ஆரோக்கிய செயற்பாடுகளுக்கு இந்நிதி பயன்படுத்தப்படும் என அவர் கூறினார்.

கடந்த டிசெம்பர் மாதம் தொடக்கம் அவுஸ்திரேலிய அரசு இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கென 23.5 மில்லியன் டொலர்களை செலவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (50)

## கண்ணீர் அஞ்சலி



**பா.வைத்திலிங்கம்**

(முன்னாள் உபதலைவர், சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்)

அவர்கள் இறைபதம் எய்திய செய்தி கேட்டு உளம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குவதுடன் அவரின் பிரிவால் துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம், **தலைவர், பணிப்பாளர்கள்,**
சுன்னாகம். (C/558517) **பணியாளர்கள்.**

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் பூலோகசேகரம்

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், உடுவில் பிரதேச செயலகம்)



கிளானை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது கல்லாரை மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பூலோகசேகரம் 09.05.2009 சனிக்கிழமை சிவபத மடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும், மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும், நளாயினி, கிருஷ்ணவேணி (ஆசிரியை, ஸ்ரீமுருகன் வித்தியாசாலை - ஏழாலை), உஷாநந்தினி, அனுஷா ஆகியோரின் அன்புத் தந்தையும், ரவீந்திரன், சிவரூபன் ஆகியோரின் அன்பு மாமனும் கீர்த்திகன், கேதாரணி ஆகியோரின் அன்புப் பேரனும், பவளலக்சுமி, மங்கையர்க்கரசி, புவனேஸ்வரி, தனலக்சுமி, யோகேஸ்வரி, நடேசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் பாலகிருஷ்ணன் காலஞ்சென்றவர்களான தங்கநாதன், கணேசலிகம், கெங்காதேவி மற்றும் தியாகராஜா காலஞ்சென்ற நடராஜா மற்றும் பத்மாவதி, பரமேஸ்வரி காலஞ்சென்ற மைக்கல் பெக்வித் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.05.2009) செவ்வாய்க்கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கல்லாரை, மல்லாகம். **மனைவி, பிள்ளைகள்,**
தொ.பே:- 0779590460 (85183) **மருமக்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீர்வேலிக் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்
ஆறுமுகப்பெருமான், சிவன், விநாயகப்பெருமான் ஆகியோர் மூன்று தேர்களில் எழுந்தருளி அடியவர்களுக்கு அருள் பாலிப்பதையும் பக்தர்கள் தூக்குக் காவடி எடுத்து நேர்த்திக் கடன்கள் தீர்ப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: நந்தன்)

# ஆலயங்களில் இடம்பெறும் சங்காபிஷேகங்களின் போது வழங்கப்படும் தீர்த்தத்தில் மருத்துவக்குணம் உள்ளது

## உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் தெரிவிப்பு

வலி.வடக்கு, மே 11



ஆலயங்களில் செய்யப்படும் சங்காபிஷேக நிகழ்வின் போது வழங்கப்படும் தீர்த்தத்தில் ஏற்புவலி உட்பட பல்வேறு நோய்களையும் தீர்க்கும் மருத்துவக் குணாம்சங்கள் காணப்படுகின்றன. இதனை கலிபோர்னிய நாட்டின் விஞ்ஞானி ஒருவரே தன் ஆய்வின் அடிப்படையில் உறுதிப்படுத்தியுள்ளதுடன் தன் ஆங்கில நூலிலும் வெளியிட்டுள்ளார்.

மேற்கண்டவாறு தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய பரிபாலன சபைத் தலைவரும் அதிபருமான செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் குறிப்பிட்டுள்ளார்.

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் வட மாகாண சுதேச மருத்துவத் திணைக்களமும் வடபிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களமும் இணைந்து அமைந்த ஆயுள்வேத வைத்தியசாலை திறப்புவிழா செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய ஆறுதிருமுருகன் தெரிவித்தவை வருமாறு:

இன்று எமது மக்கள் பெரும் துன்ப, துயரங்களுக்கு ஆளாகியுள்ளனர். இதனால் நாம் எந்த நிகழ்வையும் அடக்கமாகவும் அமைதியாகவும்தான் கொண்டாட வேண்டிய நிலையில் உள்ளோம்.

இன்று பலஇடங்களில் உள்ள வைத்தியசாலைகள் அழிந்தும், தூர்ந்தும் போயுள்ளன. அத்தகைய வைத்தியசாலைகளைக் கூட புனரமைப்புச்செய்து இயங்கவைக்கும் செயற்பாடுகளையும் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் முன்னெடுத்து வருகின்றார்.

வைத்தியர்களின் பற்றாக்குறையைப் போக்கும் முகமாக ஓய்வுபெற்ற வைத்தியர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களை அழைத்து வந்து வைத்தியசாலைகளை இயங்கவைத்து வருகின்றார்.

குடாநாட்டில் மருந்தாளர்களுக்கும் தாதிகளுக்கும் பெரும் பற்றாக்குறை காணப்படுகின்றது. இதற்கான பயிற்சிகளை முன்னெடுக்கும் சந்தர்ப்பத்தில் அதற்கு உரிய உதவிகளைப் புரிவதாகவும் தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு ஆயுள்வேத வைத்தியசாலை இயங்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டியிருந்தேன். அதனைக்கூட ஒரு சில நாள்களில் செயற்படுத்தியுள்ளார்.

தெல்லிப்பழை பிரதேசத்தில் வாழும் படித்த இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தக் கூடிய மருத்துவத் துறைசார்ந்த கல்விக்கான வசதிகளை ஏற்படுத்தினால் அதற்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்து தருவதாகவும் குறிப்பிட்டார்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் உரையாற்றும் போது:

ஆன்மீகத்தை சமூகத்துடன் இணைத்து மாற்றத்தையும் புரட்சியையும் ஏற்படுத்தியவர் அன்னையாவார். இன்று பல ஆயிரக்கணக்கான குழந்தைகள் போஷாக்கின்மையால் எமது பகுதிகளில் வாழ்கிறார்கள். இந்நிலையில் ஆண்டவனின் பெயரால் ஆயிரம் குடம் பாலை ஊற்றுவதில் பயனில்லை. இந்த வகையில் அம்மா சமுகத்தின் தேவை உணர்ந்து சிறந்த சமூகத் தொண்டுகளையும் முன்னெடுத்துள்ளார். அம்மாவின் வழியில் இன்று பல இந்து ஆலயங்கள் சமூகப்பணிகளில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அம்மையார் அன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் சித்தமருத்துவப் பீடத்தை ஆரம்பித்து வைத்தார். இன்று அங்கு வெளியேறிய வைத்திய கலாநிதிகளைக் கொண்டு அம்மாவின் இடத்தில் ஆயுள்வேத வைத்தியசாலை ஒன்றை ஆரம்பிக்கின்றமை மகிழ்ச்சியான விடயமாகும்.

குடாநாட்டில் 38 வைத்தியசாலைகள் இயங்குகின்றன. மக்கள் அந்தந்தப் பகுதிகளில் சிகிச்சை பெறவேண்டும் என்பதே நோக்கமாகும். இதன் ஒரு பகுதியாக ஐந்து கிலோ மீற்றர் தூரத்துக்குள் மக்கள் வைத்தியசேவையைப் பெறவேண்டும் என்ற நோக்கில் ஆயுள்வேத வைத்தியசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன -என்றார்.

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி வைத்திய் கலாநிதி செல்வி சி. சிவராணி உட்பட மற்றும் பலரும் உரையாற்றினார்கள். (203-86)

# நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள உயர்தர மாணவரின் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், மே 11

தென்மராட்சிப் பகுதியில் உள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் உயர்தர வகுப்பு மாணவர்களின் விவரங்கள் திரட்டப்பட்டுள்ளதாக மேலதிக மாகாண கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதரப் பரீட்சைக்குத் தோற்ற வசதியாகவே மாணவர் விவரப் பட்டியல் திரட்டப்பட்டு அதற்கான படிவங்களும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இதேசமயம் - கடந்தவாரம் யாழ்ப்பாணம் வருகை தந்த வடமாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா இடம்பெயர்தோர் நலன்புரி நிலையங்களுக்கு சென்று அங்கு தங்கியிருக்கும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் தேவை குறித்தும் கலந்துரையாடியுள்ளார் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (203-224)

# மருந்தாளர் தேர்வில் 6 பேர் சித்தியடைந்தனர்

கோப்பாய், மே.11

இலங்கை மருத்துவக் கல்லூரி சபையால் கடந்த வருடம் நடத்தப்பட்ட மருந்தாளர் (வெளிவாரி) தேர்வில் யாழ்.மாவட்டத்திலிருந்து 12 பேர் தோற்றி 6 பேர் சித்தியடைந்துள்ளனர்.

மு.பாலச்சந்திரன், யுவபிரதா கணேசபிள்ளை, திருமதி கவிதா கோணநாயகம், இ.சுபேந்திரன், சுகிர்தராணி தம்பையா, திருமதி நமலாதேவி தற்பரன் ஆகிய 6 பேருமே சித்தியடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் கடந்த வருடம் 34 பேர் தோற்றுவதாக இருந்த பரீட்சைக்கு போக்குவரத்து இடர்பாடு காரணமாக 22 பேர் கொழும்பு செல்லமுடியாமல் போனமை குறிப்பிடத்தக்கது. (203-72)

# சைவசமய அறிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 11

வண்ணை ஸ்ரீ அரசடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழாவையொட்டி நடத்தப்படுகின்ற சைவசமய அறிவுப் போட்டி எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் மாணவர்கள் விண்ணப்பங்களைப் பெற்று பரீட்சைக்கு விண்ணப்பிக்குமாறு நிர்வாக சபைத் தலைவர் அ.ஜெயராமன் அறிவித்துள்ளார். (9)

# விசேட தேவையுடையோர் விவரங்கள் சேகரிப்பு

நவாலி, மே 11

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இன்று தொடக்கம் விசேட தேவைக்குரியவர்களின் விவரங்கள் திரட்டப்படவுள்ளன. தத்தமது கிராம சேவையாளர் அலுவலகங்களுக்கு காலை 9 மணிக்கு வருகை தருமாறு உரியவர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

குடும்ப அட்டை, குடும்பப் படம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் எடுத்து வருமாறு சமூக சேவைகள் உத்தியோகத்தர் அருந்தவராசா கேட்டுள்ளார்.

இன்று 11ஆம் திகதி ஜே/141, ஜே/142, 12ஆம் திகதி ஜே/143, ஜே/144, 14ஆம் திகதி ஜே/145, ஜே/146, 15ஆம் திகதி ஜே/147, ஜே/148 18ஆம் திகதி ஜே/149, ஜே/150, 19ஆம் திகதி ஜே/151, ஜே/152. (203-100)

# இலங்கை இலக்கியப் பேரவையின் வெள்ளி விழாவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், மே 11


இலங்கை இலக்கியப் பேரவையின் வெள்ளி விழாவும் 2006- 2007 ஆண்டுகளில் வெளிவந்த சிறந்த நூல்களுக்கான பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணியளவில் நல்லை ஞானசம்பந்த ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

எழுத்தாளர் செங்கைஆழியான் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வரவேற்புரையினை அரியாலையூர் சி. சிவதாசனும் ஆசியுரையினை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரப் பரமாச்சாரியா சுவாமிகள், அருட்தந்தை சு.ஜெபநேசன் ஆகியோரும் வாழ்த்துரையினை பேராசிரியர் அ.சண்முகதாஸ், செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

பிரதமவிருந்தினராக யாழ்.ப.நோ. கூட்டுறவுச்சங்கத்தலைவர் ப.கிரிதரனும், சிறப்புவிருந்தினர்களாக க்கட்டைவேலி ப.நோ.கூட்டுறவுச்சங்க முகாமையாளர் த.சிதம்பரப்பிள்ளை, அரியாலை ப.தெ.வ.அபிவிருத்தி கூட்டுறவுச்சங்க முகாமையாளர் ச.புஸ்பராசா, நல்லூர் பிரதேசசெயலக சமுர்த்தி தலைமைத்துவ முகாமையாளர் த.சந்திரகாசன், கோண்டாவில் ப.தெ.வ. அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர் பொ.யேசுராசா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பரிசளிப்பு உரையினை பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை நிகழ்த்தவுள்ளார். இலக்கியப்பேரவையால் சிறந்த நூல்களுக்கான பரிசில்கள் வழங்கல், கனக செந்திநாதவிருது பெற்ற சிறுகதைத் தொகுப்பு நூலின் வெளியீட்டுரையினை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா நிகழ்த்த முதற்பிரதியினை அ.த கிருஷ்ணசாமி பெற்றுக் கொள்ளவுள்ளார்.

''நாவேந்தன் விருது'' வழங்கலுக்கான பரிசளிப்பு உரையினை பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் நிகழ்த்தவுள்ளார். (9- 236)



சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் சுதேச மருத்துவ மாநாடும் கண்காட்சியும் இடம்பெற்றன அந்நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள்.
வட இலங்கை சுதேச மருத்துவ சபை செயலாளர் சுதேச மருத்துவர் ஜெ.ஜெயபாலன், யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறைத் தலைவர் சி.பஞ்சராசா ஆகியோர் உரையாற்றுவதை முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.
கல்லூரி அதிபர் வைத்திய கலாநிதி திருமதி கே.பரமசிவம், [illegible] பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் சித்த ஆயுள்வேத மருத்துவப் பட்டம் பெற்ற மாணவிகளுக்கு பதக்கம் அணிவிப்பதை மூன்றாவது, நான்காவது படங்களிலும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனைக்கு

## முதலீட்டுக்கான அரிய ஒரு சந்தர்ப்பம்

### யாழ்நகர், யாழ்ப்பாணம்

மதிப்பீட்டு இல. 55, 157 மானிப்பாய் வீதியில் தற்போது சமுர்த்தி வங்கி அமைந்துள்ள ஆதனம் (சிவன்கோயிலை அண்மித்துள்ளது)

காணியின் விஸ்தீரணம்: - 2பரப்பு அண்ணளவாக
கட்டடவிபரம்- காட்சி அறை 1300 ச.அடி
இரண்டு மாடிக்கட்டடம்-2900 ச.அடி

மேலதிக விவரங்களுக்கு
INQUIRIES - CALL D.G. NEWTON
PHONE - 5444420 / 21-ETN 410
FAX - 5364295

(சி/558373)



# தவறிவிட்டது

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கோணேஸ்வரன் என்பவரது மோட்டார் சைக்கிளின் (NPTO 1556) பின்பக்க இலக்கத் தகடு 09.05.2009 அன்று நீர்வேலிக்கும் கோப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கோப்பாய் பிரதேச செயலகத்தில் ஒப்படைத்து தவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.



# காணி விற்பனைக்கு

இராசபாதை வீதியில் அமைந்துள்ள 4 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
T.P : 07764 00747
07750 24503
முகவரி: ஐ. யோகரட்ணம்
கட்டுடைச் சந்தி, மானிப்பாய்.


## கண்ணபுரம் கிராமத்தில் வாழ்வாதாரக் கடன் உதவி

வேலணை, மே 11

வேலணை தெற்குப் பகுதியில் கண்ணபுரம் கிராமம் மீள் எழுச்சித் திட்ட கிராமமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 47 பயனாளிகளுக்கு தலா பத்தாயிரம் தொடக்கம் முப்பதினாயிரம் வரை வாழ்வாதாரச் சுழற்சி முறைக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் மாவட்ட செயலக சமூக வலுவூட்டலாளர் ஜே.பிரபாகரன், வேலணை பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் திருமதி தி.மீரா, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ந. செல்வச்சந்திரன், பகுதி கிராம உத்தியோகத்தர் இ.குலசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(203-167)

## மானிப்பாய் பிரதேச சபையின் நூலக வார நிகழ்வுகள்

தேசிய நூலக வாரத்தையொட்டி மானிப்பாய் பிரதேச சபையின் ஆனைக்கோட்டைக் கிராம உபஅலுவலகத்தில் நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் 19 ஆம் திகதிவரை பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

ஆரம்ப நாளான நாளை அதிர்ஷ்டப் பரி சளிப்பும் புத்தகங்கள் சேகரிப்பும் இடம் பெறும். 13 ஆம் திகதி முன்பள்ளி மாணவர்களுக்கான சிறுவர் நிகழ்வுகள், 14ஆம் திகதி பாடசாலை மாணவர்களுக்கான கலை நிகழ்வுகள், 15 ஆம் திகதி ஆரம்பப் பாடசாலை மணவர்களுக்கான கல்வி நிகழ்ச்சி, 16ஆம் திகதி நூல் சேகரிப்பு, 17ஆம் திகதி சேகரிக்கப்பட்ட நூல்களின் கண்காட்சி, 18 ஆம் திகதி அமுது சஞ்சிகை வெளியீடு ஆகியனவும் பிரதேசசபைச் செயலர் பு.சிவலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளன.

(203-100)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26 ★ 05 ★ 1926



மறைவு 23 ★ 04 ★ 2008

திருமதி

## சிவகுமாரசாமி மனோன்மணி

திதி: திருதியை (12.05.2009)

நாளை (12.05.2009) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ் வீதி (மருதடி)
வல்வெட்டித்துறை. (84951)

பிள்ளைகள்,
குடும்பத்தினர்.



# இறைவன் மலரடியில்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## திருமதி எலிசபெத் யோசேப்

(நல்லம்மா)

தோற்றம் 21 ★ 07 ★ 1922 மறைவு 12 ★ 04 ★ 2009

நீண்ட வாழ்க்கைப் பயணத்தை
நிறைவாக முடித்து விட்டீர்
ஆண்டவனின் பாதம் நின்றெம்
குறையெல்லாம் தீர்ப்பீர் அம்மா

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக நாளை (12.05.2009) செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியில் அனைவரையும் கலந்துகொண்டு இவருக்காகச் செபிக்கும்படி அழைக்கின்றோம்.

கடந்த 12.04.2009 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தாய் திருமதி எலிசபெத் யோசேப் அவர்கள் நோயுற்றிருந்த பொழுதில் அவரைப் பரிவுடன் கவனித்துக் கொண்ட யாழ். போதனா வைத்தியசாலையினதும், திருச்சிலுவைக் கன்னியர் சுகநல நிலையத்தினதும் வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் இவரின் மரணச் செய்தியறிந்து நேரில் வந்து எமது துயரில் பங்கு கொண்டதுடன் பல்வேறு வழிகளிலும் எமக்கு ஒத்தாசை புரிந்த அனைவருக்கும், தொலைபேசி மூலமும், தந்தி மூலமும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், இறுதி நிகழ்வின்போதும் திருப்பலியின்போதும் கலந்துகொண்டு இவருக்காக வேண்டிக் கொண்ட அனைவருக்கும் விசேட விதமாக யாழ்.மறைமாவட்ட பேராயர் மேதகு, தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களுக்கும், அனைத்துக் குருக்கள், கன்னியர்களுக்கும், யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மட அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும், இன்னும் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தோர், மலரஞ்சலி செலுத்தியோர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றோம்.

89, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (85167)

குடும்பத்தினர்.



# ஓராண்டு நினைவஞ்சலி

## அமரர் சுப்பிரமணியம் சோதிலிங்கம்



மனிதராய் 24.11.1946
சோதியாய் 22.04.2008

மணித்தீவில் உதித்த ஒளியே! மனிதருள் மாணிக்கமே!
நீர் எம்மை விட்டுச் சென்று ஓராண்டு ஆனதுவோ!
ஜீரணிக்க முடியவில்லை காணும் இடமெல்லாம் உம் ஒளி
காற்றோடு தெரிகிறது மூத்தமகள் வாழ்வுதனில்
பேரன் கண்டு இன்புற்று இளைய மகள் வாழ்விற்காய்
இந்திய தேசம் சென்று இளைய மகள் வாழ்வளித்து
ஆசைமகன் கேட்டவற்றை அன்போடு அளித்து
மருமக்கள் அரவணைப்பினிலே, மனைவியுடன் மகிழ்ந்திருந்து,
கூட்டுக் குடும்பத்தின் குதூகலத்தில் இருந்த வேளைதனில்
காலனவன் கணக்கினால், காற்றோடு வந்த சேதி
கனவாகிப் போகாதோ! உயிரும் உடலும் உள்ளவரை,
காற்றும், நீரும் உள்ளவரை, உம் நினைவில் வாழ்வோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

"கலாபவனம்"
8ஆம் வட்டாரம், நயினாதீவு.
077 8331714 (85162)

உம் பிரிவின் [illegible]



# Jaffna College Institute of Technology

Vaddukoddai, Jaffna

புதிய பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கவும்

**Computer Diploma Course**

Diploma in Computer Programming & Data Processing
* System Analyzing and Design
* Database Management System
* Fundamentals of Computer Technology
* Data processing
* Application packages
* C++
* Java
* Oracle
* Visual.net

- One year (Full

**Computer Certificate Courses**

Fundamentals of Information and Computer Technology
* Computer System (Basic concepts of information technology, Number System, Logic Gates, Computer architecture & Hardware Devices)
* PC Applications (Word, Excel, Access & Power Point)
* Fundamentals of Multimedia (Photoshop & Flash)
* Computer Programming (Pascal & Visual Basic)
* Data communication & Network
* Information System Technology
* Internet and Email
* HTML

- 200 hrs (Part time)

[GIT, ICT & Sri Lanka Computer Driving Licence (SLCDL) பாடநெறிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.]

* Ms Office
* Printing Technology
* Computer Hardware
* Macromedia Flash
* Visual Basic
* Maya
* C++
* Pascal

-3 Months (Part time)

**Craft Course**

Aluminium Fitting
(அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும்) 6 Months (Full Time)

மேலதிக விபரங்களுக்கு:-
Director, Jaffna College Institute of Technology,
Vaddukoddai, Jaffna, SriLanka.

JCIT
Tel No: 0602213139/ 0212228275
E- mail: jcit @ Sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிசேரியன் பிரசவத்தின்பின் அடுத்த குழந்தை எப்போது?

**கேள்வி:** பெண் வயது 31. நிறை 58 கிலோகிராம். சமீபத்தில் பொது மருத்துவப் பரிசோதனையின்போது எனக்கு 242 mg/dl கொலஸ்திரோல் இருந்ததாகத் தெரியவந்தது. கொலஸ்திரோல் அதிகம் என்பதால்- போஷாக்கு நிபுணர் (NUTRIONIST) ஒருவரின் ஆலோசனைப்படி எனது உணவு முறைகளை மாற்றி அமைத்தேன். என்றாலும் - உணவு முறை மாறிய பின்னர்- மேலும் எனது நிறை இரண்டு கிலோ அதிகரித்து விட்டது. எனக்கு இப்பொழுது கொஞ்சம் நடந்தாலும் மூச்சிரைக்கின்றது. விரைவாக நடந்தால் நெஞ்சு வலி ஏற்படுகிறது. எனது நிறை அதிகரிப்புக்கு காரணம் என்ன? எனது கொலஸ்திரோல் அளவை குறைக்க வழிசொல்லவும்.

**பதில்:** உங்கள் கொலஸ்திரோல் அளவும் உங்கள் நிறையும் கொஞ்சம் அதிகமாவே உள்ளன. சமீபத்தில் உங்களது எடை அதி கரிப்புக்குக் காரணம் புதிய உணவு முறை இல்லை. புதிய உணவு முறைக்கு முன்னர் நீங்கள் பின்பற்றிய உணவுப் பழக்கத்தின் விளைவுதான் இப்போது அதிகரித்துள்ள நிறை. புதிய உணவு முறை உங்கள் உடலில், உடல் நிறையில் மாற்றம் ஏற்படுத்துவதற்கு ஒரு மாதத்திற்கு அதிகமாக தேவைப்படும். எனவே, மனம் தளராமல் புதிய உணவு பழக்கத்தை தொடர்ந்து கைக்கொள்ளவும். உணவுப் முறையில் மாற்றம் செய்தால் மட்டும் போதாது. சாதாரண அல்லது சிறிய வீரியமான உடற் பயிற்சியும் சேர்த்து செய்யும் போதுதான் உடல் நிறையில் மாற்றம் ஏற்படும் என்பதை மனதில்கொள்ளவும். அத்தோடு ஓர் இதயநோய் நிபுணரின் ஆலோசனையுடன் உங்கள் இதய தொழிற்பாட்டை கவனிக்கவும். ECG, ECHOCARDIOGRAPHY என்பவை உங்கள் இதயத்தின் தன்மை, தொழிற்பாடுகளை விளக்குவதாக அமையும். அத்துடன் மூச்சிரைப்புக்கும் இதய வலிக்கும் சம்பந்தம் உண்டா என்பதையும் கண்டறிய முடியும். நுரையீரல் தொழிற்பாட்டை அறிய உதவும் - LUNG FUNCTION அல்லது PULMONARY FUNCTION பரிசோதனை ஒன்றையும் செய்து - அதில் எதுவித பிழையும் இல்லை என்றால் [illegible] நடை[illegible]பயிற்சியை நீங்கள் மேற்[illegible]ளலாம் [illegible] எது வயதுக்கு நிச்சயம் [illegible] முடிவுகள் பிழை[illegible] என்று எண்ணு[illegible] உங்கள் மூச்சிரைப்பு, மெலிதான நெஞ்சுவலி என்பவற்றுக்கு உங்கள் எடையே காரணமாக இருக்கும். கொலஸ்திரோலைக் குறைப்பதற்கு உணவு முறையுடன், வேகமான நடைப்பயிற்சியும் உதவும். வேகமான நடைப்பயிற்சி கொழுப்புக்களில் - TRIGLYCERIDES என்கின்ற - கொலஸ்திரோல் உற்பத்திக்கு அடிப்படையான கொழுப்பு சக்தியைக் குறைப்பதற்கும், உடலுக்கு தேவையான நல்ல கொலஸ்திரோல் என்கின்ற HDL கொலஸ்திரோலின் அளவை அதிகரிக்கவும் உதவும்.

***

**கேள்வி:** எனது தந்தை - வயது 72. இதுவரை காலமும் நல்ல சுகதேகியாக வாழ்ந்தவர் அவருக்கு இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்கள் எதுவுமில்லை. கடந்த சில நாள்களாக அவரை அறியாமல் படுக்கையில் சிறுநீர் கழிக்கிறார். அவரைக் கேட்டால் சிறுநீர் வருவதை தன்னால் கட்டுப்படுத்த இயலாமல் இருக்கின்றதென்று கூறுகின்றார். பரிகாரம் கூறவும்.

**பதில்:** உங்கள் தந்தையாருக்கு - URINARY INCONTINENCE என்கின்ற சிறு நீரைக் கட்டுப்படுத்த இயலாத கோளாறு உள்ளது. இந்த வயதில் இந்த இயலாமை ஏற்படுவதற்கு- OVERACTIVE BLADDER என்ற பிரச்சினை ஒரு காரணம். அடுத்தது சிறுநீர் தொற்று மற்றும் சிறுநீர்ப்பையில் சிறுநீரை முற்றாக வெளியேற்ற முடி யாமை - INCOMPLETE EMPTYING OF BLADDER - (இதனால் OVERFLOW INCONTINENCE என்கின்ற கோளாறு ஏற்படுகிறது) என்பவை காரணமாகின்றன. முழுவது மாக சிறுநீரை வெளியேற்ற முடியாமை என்கின்ற பிரச்சினையும், சிறுநீர் தொற்றும் - மருந்து மாத்திரைகளால் குணப்படுத்தக் கூடியவை. சிறுநீர்ப்பை அதிக அளவு அழற்சியுறும் OVERACTIVE BLADDER பிரச்சினைக்கு சத்திர சிகிச்சைதான் பரிந்துரைக்கப்படுகிறது.

***

**கேள்வி:** பெண் வயது 27. எனது பிரசவம் சமீபத்தில் நடந்தது. சிசேரியன் சத்திர சிகிச்சை முறையில் குழந்தை பிரசவிக்கப்பட்டது. சிசேரியன் சிகிச்சைக்கு பின்னர் எவ்வளவு காலம் தாழ்த்தி - நான் இன்னொரு குழந்தை பெறலாம். அந்த குழந்தையையும் சத்திர சிகிச்சை முறையில்தான் பிரசவிக்க வேண்டுமா? சாதாரணமுறையில் பிரசவிப்பது கஷ்டமா? விளக்கம் தருக.

**பதில்:** உங்களுக்கு என்ன காரணத்துக் காக சிசேரியன் சிகிச்சை மூலம் குழந்தை பிரசவிக்கப்பட்டது என்பது பற்றி எதுவித தகவலையும் நீங்கள் தரவில்லை. பொது வாக - சாதாரண முறை பிரசவத்தினால் தாய்க்கு அல்லது குழந்தைக்கு ஏதாவது பிரச்சினை நேரும் என்று - மகப்பேறு வைத்தியர் அனுமானித்தால் - சிசேரியன் சிகிச்சையை அவர் விதந்துரைப்பார். இப்படி சிசேரியன் சிகிச்சைக்கான காரணங்கள் சிலவேளையில் அடுத்த பிரசவத்தின்போது இல்லாவிடில் - அடுத்த பிரசவம் கருப்பைக்கு பிரசவநேரத்தின்போது ஊறுதராவிடில் - சிலவேளைகளில் போதிய மருத்துவ பாதுகாப்புமுறைகளுடன் - யோனிவழி பிரசவத்தை (VAGINAL DELIVERY) மருத்துவர் முயற்சி செய்வார். அது கைகூடாவிடின் திரும்பவும் சத்திரசிகிச்சைதான் முடிவாகும்.

இனி உங்களின் வினாவின் முதலாவது பகுதிக்கு வருவோம். சிசேரியன் சத்திர சிகிச்சைக்குப் பின்னர் அடுத்த குழந்தை பெறுவது எப்போது என்பது உங்கள் விருப்பத்தையும் வசதியையும் பொறுத்தது. ஒரு காலத்தில் சிசேரியன் சத்திர சிகிச்சையினால் கருப்பையிலும், வயிற்றிலும் ஏற்பட்ட தளிம்பு - (SCAN) - காலம் செல்ல செல்லத்தான் கடினமாகி வலுவடைகின்றது. அதற்கு முன்னர் கருத்தரித்தால் - பிரசவத்தின்போது கருப்பை சுவர்பிரிந்து விடும் (RUPTURE) என்ற எண்ணம் இருந்தது. இப்பொழுது சிசேரியன் சிகிச்சைக்குப் பின்னர் - ஆறு மாதங்களின் பின்னர் இப்படி கருப்பை சுவர் பிரிதல் - சம்பவம் நடைபெறுவது மிகக் குறைவு என்ற ஆய்வுகள் மூலம் அறியப்பட்டுள்ளது. இந்த ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் அடுத்த பிரசவம் கட்டாயம் சிசேரியனாக இருக்க வேண்டியதில்லை என்று கருத்தும் நிலவுகின்றது. இந்தநிலையில் உங்கள் வினாவுக்கு எனது பதில் - குறைந்தது ஒருவருடம் பொறுத்திருந்து கருத்தரிப்பது நல்லது என்பதே. கருப்பை சுவர் வலு பற்றிய காரணத்தைவிட தாய் மற்றைய பிரசவத்திற்கு தயாராகும் உடல்நிலை, ஒரு வருடம் பிறந்த குழந்தையை பராமரிக்கும் நடைமுறை - இதனால் தாய்க்கும் குழந்தைக்கும் இடையில் ஏற்படும் மனோவியல் புரிந்துணர்வு என்பவற்றை வைத்துக்கொண்டே, இந்த ஒருவருட கால எல்லையை நான் கணித்துக் கூறுகின்றேன். மற்றைய மருத்துவர்களின் அபிப்பிராயம் எனது கருத்தை முழுக்க முழுக்க ஆதரிக்காமல் இருந்தாலும் காலம் தாழ்த்துவதால் பெரும் பிரச்சினைகள் ஏற்படப் போவதில்லை, நன்மைகளே அதிகம் உள்ளன என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள்.

***

**கேள்வி:** வயது 16. ஆண். எனது உயரம் 5 அடி 3 அங்குலம். எனது ஒரே வயதை ஒத்த நண்பர்களை விட நான் உயரம் குறைவாக உள்ளேன். எனது


இலவச மருத்துவ ஆலோசனை பெறுங்கள்
நீங்களும் கேள்விகளை அனுப்பி மருத்துவ ஆலோசனைகளைப் பெறலாம்.
நீண்ட கால அனுபவம் உள்ள பிரபல டாக்டரும் விருதுபெற்ற எழுத்தாளருமான
டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம்
பதில் தருகிறார்.
இலவச மருத்துவ ஆலோசனை
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


உயரத்தைக் கூட்ட வழி உண்டா? பத்திரிகை விளம்பரங்களில் வரும் உயரத்தை அதிகரிக்கும் மருந்து மற்றும் வழிவகைகளை பின்பற்றுவதால் ஆபத்து ஏதாவது உண்டா?

**பதில்:** ஒரு சாதாரண மனிதனின் உயரம் அவரது முன்னோர், முக்கியமாக பெற்றோரின் Genes எனப்படும் மரபணுக்களில் தங்கியுள்ளது. எனவே, ஒரு குழந்தை பிறக்கும் முன்னரே - அது எவ்வளவு உயரம் வளரும் என்பது செயல் திட்டப் படுத்தப்பட்டுள்ளது. (Every person has been "PROGRAMMED" to attain certain height). எனவே, இந்தக் குழந்தை வாழ் நாளில் - போதுமான போஷாக்கான உணவை [illegible]முறையாக உடற்பயிற்சி



செய்து, போதுமான ஓய்வும் கிடைக்கப் பெற்றால் - இயற்கையாக அது எதிர்பார்த்த, செயற்திட்டப்படுத்தப்பட்டுள்ள - உயரத் துக்கு வளரும். உயர்ந்த பெற்றோரின் குழந்தைகள் உயரமாகவும் - உயரம் குறைந்த பெற்றோரின் குழந்தை கள் உயரம் குறைவாகவும் வளருவது பொதுவான நியதி.

உடலின் மற்றைய உறுப்புகளின் வளர்ச்சிக்கு எப்படி புரதச் சத்து விட்டமின் தேவையோ அதுபோல் எலும்பு வளர்ச்சிக் கும் இவற்றுடன் சில ஹோர்மோன்கள் அவசியப்படுகின்றன. இந்த ஹோர்மோன் களை (Growth Hormones) - வளர்ச்சிக் குரிய ஹோர்மோன்கள் எனக் குறிப்பிடு வார்கள். இந்த ஹோர்மோன்கள் மூளை யின் ஒரு பகுதியான பிற்றியூட்டரி சுரப்பி களால் சுரக்கப்படுகின்றன. எனவே, வளர்ச்சியின்போது - போஷாக்கு குறைவாலும், பிற்றியூட்டரி சுரப்பிக் கோளாறுகளாலும் - உயரம் குன்றுவதற்கு இடமுண்டு.

ஆண்குழந்தைகளின் வளர்ச்சி 13 - 15 1/2 வயது காலகட்டத்தில் ஏற்படும். பெண் குழந்தைகளின் வளர்ச்சி 11 - 13 வயது காலகட்டத்தில் ஏற்படும். குள்ளமாக இருக்கும் குழந்தைகள் திடீர் திடீரென்று உயரமாக வளர்வதை Growth Spurts என்று மருத்துவத்தில் குறிப்பிடுவார்கள். இதன் போது சிலவேளைகளில் அதிகம் கூடியது, 4'' வளர்ச்சி ஆண்களிடமும் - 3 1/2'' வளர்ச்சி பெண்களிடமும் ஏற்படலாம். பொதுவாக இந்த இருபாலாரினதும் வளர்ச்சிப் பருவம் 18 வயதின் பின்னர் வருடத்திற்கு 3/4'' வீதம் ஏற்பட்டு ஆண்களுக்கு 25 வயதின் பின்னரும் பெண்களுக்கு 21 வயதின் பின்னரும் வளர்ச்சி நின்றுவிடுகிறது.

உங்களுக்கு இப்பொழுது வளர்ச்சிப் பருவம் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றது. ஒரே வயதினராக இருப்பினும் ஒவ்வொருவருக்கும் இந்த வளர்ச்சிப் பருவம் Growth Spurts வெவ்வேறு காலகட்டத்தில் நடைபெறுவதால் உங்கள் வளர்ச்சி சரியாக முற்றுப்பெற இன்னும் காலம் இருக்கலாம். 18 வயதளவில் உங்கள் வளர்ச்சி உங்கள் நண்பர்களின் வளர்ச்சியோடு சமனாக ஏற்படலாம். எனவே, கவலைப்படாதீர்கள். ஒரு சிலர் இந்த உயர வித்தியாசத்தை கருத்தில் கொண்டு விளம்பரப்படுத்தப்படும் மருந்துகள், உடற்பயிற்சிகளில் பணத்தை செலவழிப்பதுண்டு. விளம்பரதாரர்களும் வளர்ந்து கொண்டிருக்கும் உங்கள் பருவத்தினரை வசியப்படுத்தி - பிந்திவர இருக்கும் உங்கள் வளர்ச்சிப் பருவத்தில் நம்பிக்கை வைத்து விட்டமின்களையும், கம்பிகளில் தொங்குதல் போன்ற உடற்பயிற்சிகளையும் பணத்துக்கு விற்பார்கள். தாமதமாகி நிற்கும் வளர்ச்சி செயற்படும்போது - உங்கள் உயரம் இயற்கையாக வளரும்போது - அவர்கள் சிகிச்சையால்தான் உங்கள் உயரம் வளர்ந்ததாக நம்ப வைப்பார்கள். ஏமாந்து விடாதீர்கள். உண்மையில் உங்கள் உயரம் மருந்துகளால், பயிற்சிகளால் வளருவ தென்றால் 25 வயதுக்கு பின்னர் - இயற்கையாக வளர்ச்சி நின்ற பின்னர் - அவர்கள் சிகிச்சையளித்து வெற்றியை காட்டுவார்களா?

இன்னும் சிலர் - வளர்ச்சி ஹோர்மோன் களையும் - வளர்ச்சிக்கு உதவும் அமினோ அசிட் என்ற புரத முன்பொருள்களையும் உபயோகிப்பர். இவை பின் விளைவு களைக் கொண்டதால் வைத்தியர்கள் இதனை பரிந்துரைப்பதில்லை.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராசி பலன்

11-05-2009 முதல்
17-05-2009 வரை

பொ.சந்திரலிங்கம்




அக்சுவினி, பரணி, கார்த்திகை 1.

காரிய தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர். மன அமைதி இருக்கும்.




கார்த்திகை 2, 3, 4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளில் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.




மிருகசீரிடம் 3, 4. திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.




புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்

காரியசித்தி உண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல வீடு வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.




மகம், பூரம், உத்தரம் 1

காரியத்[illegible] இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணப் பற்றாக்குறை [illegible]லவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இராது.




உத்தரம் 2, 3, 4. அத்தம், சித்திரை 1, 2

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.




சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.




விசாகம் 4, அனுசம், கேட்டை

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.




மூலம், பூராடம், உத்தராடம் 1.

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக ஈடுபாடு குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.




உத்தராடம் 2 ,3, 4. திருவோணம், அவிட்டம் 1, 2

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்கும்.




அவிட்டம் 3, 4. சதயம், பூரட்டாதி 1, 2, 3

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.




பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம், காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். மன அமைதி இருக்காது.

## 3 ஆயிரம் கற்பிணித் தாய்மார் மோதல்பகுதியிலிருந்து வெளியேற்றம்

ஜெனிவா, மே 11

வடக்கில் மோதல் நடைபெற்று வரும் பகுதிகளிலிருந்து சுமார் மூவாயிரம் கர்ப்பிணித் தாய்மார்கள் வெளியேறியுள்ளதாக ஐ.நாவின் சனத்தொகை நிதியம் தகவல் வெளியிட்டுள்ளது.

இவர்களில் சுமார் 350 பேர் அடுத்த மாதம் குழந்தைகளைப் பிரசவிக்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இடம்பெயர்ந்துள்ள மக்களின் வருகை அதிகரிப்பினால் சுகாதார சேவைகளில் எதிர்நோக்கும் சவால்களும் அதிகரித்துள்ளன.

இந்நிலையில், பெண்கள் மற்றும் யுவதிகளின் சுகாதாரம், பாதுகாப்புத் தொடர்பாக குறிப்பாக கர்ப்பிணிப் பெண்கள் தொடர்பான உதவிகளை அதிகரிக்க உத்தேசித்துள்ளதாகவும் ஐ.நாவின் சனத்தொகை நிதியம் கூறுகின்றது.

குறிப்பாக குழந்தைகளைப் பிரசவிக்கும் பெண்களில் 15 சதவீதமானவர்கள் இரத்தம் வழங்குதல் அல்லது அவசர சத்திர சிகிச்சைப் பராமரிப்பு மற்றும் பிரசவம் தொடர்பான சிக்கல்கள், மரணம் போன்ற பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிடலாம் என்றும் அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(50)

## கைதடி வடக்கில் 'கோப்சிற்றி' திறப்பு

தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கத்தினால் கைதடி வடக்கில் அமைக்கப்பட்ட சிறப்புக் கூட்டுறவுநகர் இன்று திங்கட்கிழமை திறந்து வைக்கப்படுகின்றது.

கைதடி வடக்கு கிளைக்குழுத்தலைவர் சோ.கௌரிதாசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினாக யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் கலந்து கொள்வார்.

(7-288)





ராஜாதி ராஜ
ராஜகம்பீர ராஜமார்த்தாண்ட
லக்கிலாண்ட் பிஸ்கட் மன்னன் குடும்பத்துடன்
யாழ்.நகர் வாரார்! வாரார்!! வாரார்!!!

நீண்டகால இடைவெளியின் பின் மீண்டும் யாழ்.நகரில் அழகிய வர்ணப்பைக்கட்டுக்களில் தரத்தில் அதிஉயர்ந்த, விலையில் மிகக்குறைந்த, இலங்கையில் முதல்தர பிஸ்கட்டாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தரம் கொண்ட, லக்கிலாண்ட் பிஸ்கட் தற்போது யாழ்.நகரில் நீங்கள் வாங்கிடலாம். விருந்தினர் வீட்டுக்கு வெறும் கையுடன் செல்லுவதா? விருப்பமுடன் எடுத்துச் செல்லுங்கள். விலையில் மலிந்து, தரத்தில் சிறந்து, சுவையில் சுந்தரமாய் திகழும் லக்கி லாண்ட் கிவ்ட் பிஸ்கட் வகைகள்.

லக்கிலாண்ட் உற்பத்திகளோ பல நீங்கள் அறிந்திட அவற்றிற் சில

லக்கிலாண்ட் கிப்ட் வகைகள்
லக்கிலாண்ட் லெமன் பஃவ்
லக்கிலாண்ட் லெமன் கிறீம்
லக்கிலாண்ட் போர் பொன் சொக்லட் கிறீம்
லக்கிலாண்ட் சொக்லேட் கிறீம்
லக்கிலாண்ட் பட்டர் கெரோல்
லக்கிலாண்ட் கஸ்ரட் கிறீம்
லக்கிலாண்ட் மாரி, ஜின்ஜர், நைஸ்
லக்கிலாண்ட் சோட்டீஸ்
லக்கிலாண்ட் பூ, ஜெம் (Gem) என்னும் பல

Manufactured By:
Luckyland
Biscuit Manufactures
Kundasale, Kandy,
Srilanka.

ஏக விநியோகஸ்தர்கள்: சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி.021 222 2567


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 29 03 1925

மறைவு 11 04 2009



### அமரர் கனகசபை பொன்னுச்சாமி

கடந்த 11.04.2009 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (11.05.2009) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible]யுடை, மாவிட்டபுரம்.
[illegible]முகவரி: அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

(சி/558400) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டியின் ஆரம்ப நிகழ்வு அண்மையில்அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றது. இதில் ஐ.ஐ.எஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் கே. விக்னேஸ் உரையாற்றுவதையும், யாழ். அரச அதிபர் கே.கணேஸ், மாவட்ட செயலக நலன்புரிக் கழகத் தலைவர் ம. வித்தியானந்தன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் உட்பட பிரமுகர்கள் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.

யாழ் அரச அதிபர் உரை நிகழ்த்துவதையும் விளையாட்டு வீரர்கள் அருகில் நிற்பதையும் அடுத்துள்ள படத்தில் காணலாம்.

## பிரடோபனின் அதிரடி ஆட்டத்தால் யாழ்ப்பாணக் கல்லூரி 6 விக்கெட்டுக்களால் வென்றது

வலி வடக்கு, மே.11

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணம் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவின்ர்களுக்கு இடையே நடைபெற்றுவரும் 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஆட்டமொன்றில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிரடோபனனின் அதிரடி ஆட்டத்தால் 06 விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்றுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரியும் யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி 45.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இராகுலன் 31, பங்குஜன் 25, சங்கீத் 20, உத்தமகுமாரன் 13, ஆதித்தன் 12 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 52 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த கஜேந்திரன் 9.1 ஓவர் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 36 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும் கிரிசாந், டிலக்சன், பென்ஜேரி, ஸ்ரீகுகன், மென்டில்ஹரன் முறையே 14,16,18, 21, 27 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 39.5 ஓவர்களில் 04 விக்கெட்டுக்களை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

பிரசோபனன் 60, ஸ்ரீகுகன் 36 பென்டில்ஹரன் 23 ஆட்டமிழக்காது சீராளன் 26, மதுசன் 10 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 14 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த ஜனதாஸ் 8.5 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், சங்கீத் 21 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

## ஹொக்கி ஆட்டம்

யாழ்ப்பாணம், மே 11

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு அவை ஹொக்கி விளையாட்டுக் கழகங்க ளுக்கிடையே நடத்திவரும் ஹொக்கி சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* வடமராட்சி ஹொக்கி விளையாட்டுக் கழகம் எதிர் யாழ்ப்பாணம் சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழகம்.
* வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக்கழகம். (1-86)

## உடற்பயிற்சிப் போட்டிக...

வலி.வடக்கு, மே 11

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உடற்பயிற்சிப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள் ளன. (203-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## கே. ஸி. ஸி. ஸி கிண்ண சுற்றுப் போட்டி
## ஜொலிஸ்ராருக்கு அசத்தல் வெற்றி

வலி வடக்கு, மே.11

கே.ஸி.ஸி.ஸி வெற்றிக் கிண்ணத்திற்காக கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திவரும் 30 ஓவர்களுக்கான லீக் முறையிலாண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஆட்டமொன்றில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகமும் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் 06 விக்கெட்டுக்களை இழந்து 273 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஜனார்த்தனன் 65, தீபன் 34, சிவராஜ் 37, செந்தூரன் 39, கோபிகன் 29, அருணன் 25 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 36 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த காமராஜ் 06 ஓவர்கள் பந்து வீசி 30 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும், சுலக்சன் 06 ஓவர்கள் பந்து வீசி 42 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் சதீஸ் கண்ணா, நிரோஜன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 30 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

சஞ்சயன் 20, சதீஸ்கண்ணா 19, கஜன் 18 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த தீபன் 06 ஓவர்கள் பந்து வீசி 15 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் உமாதரன் 04 ஓவர்கள் பந்து வீசி 31 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் நாதன், நிரோஜன், ரொணி தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

## கொக்குவில் இந்து 113 ஓட்டங்களால் வெற்றி

வலி வடக்கு, மே.11

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்ப்பாணப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திவரும் 17 வயதுப் பிரிவினருக்கான் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மற்றொரு ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி 113 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரியும் சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி 45.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 235 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

உத்தமகுமாரன் 39, பங்குஜன் 35, சாம்பவன் 29, இராகுலன் 25, மயூரன் 20 ஓட்டங்களை பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 54 ஓட்டங்களும் பெறப்பட்டன.

சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த விமல்ராஜ் 8.3 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 34 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், லிங்கன் 05 ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் நிஷாந்தன், சபேசன், ஜேம்ஸ் நிசான், வெலிங்டன் முறையே 18, 23, 41, 45 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி 50 ஓவர்கள் நிறைவில் 08 விக்கெட்டுக்களை இழந்து 122 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

கோபிரமணன் 43, திலக்சன் 15, ஜேம்ஸ் நிசான் 14, நிசாந்தன் 10 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 17 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் இந்துக்கல்லூரியைச்சேர்ந்த சங்கீத் 02 ஓவர்கள் பந்து வீசி 09 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், திவாகர் 4.5 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 09 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் இராகுலன், சாம்பவன், ஜனுதாஸ், பங்குஜன் முறையே 10, 15, 18, 19 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள். (1-86)

## 2 விக்கெட்டுக்களால் வென்றது பற்றீஸியன்ஸ்

வலி வடக்கு, மே.11

கே.ஸி.ஸி.ஸி வெற்றிக்கிண்ணத்திற்காக கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திவரும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஆட்டமொன்றில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகம் 02 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் அரியாலை ஸ்ரான்லி விளையாட்டுக் கழகமும், யாழ்ப்பாணம் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் 23.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 102 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

குணதாஸ் 23, கஜதீபன் 20, செல்வராசா 15 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டதுடன், உதிரிகளாக 16 ஓட்டங்களும் பெறப்பட்டன.

பற்றீஸியன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சுஜீவன் 06 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்டுக்களையும் , ரஞ்சித் 4.5 ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும், முரளி 10 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பற்றீஸியன்ஸ் விளையாட்டுக் கழகம் 21.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 105 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

சஜீந்திரன் 25, மலாண்டோ 14, மனோஜ், நவதீபன் தலா 10 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

ஸ்ரான்லி விளையாட்டுக் கழகத்தின் சார்பில் பந்து வீசிய கஜதீபன் 05 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 14 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், துஷ்யந்தன் 5.5 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 26 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், ரஜனிகாந் 11 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

## கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் விளையாட்டுப்போட்டி முடிவுகள்

கரவெட்டி, மே 11

வடமராட்சி தெற்கு மேற்கு கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்த விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான விளையாட்டு விழாவில் வெற்றி பெற்ற கழகங்களின் விவரம்:

**வலைப்பந்து**-1ஆம் இடம்- மனோகரா விளையாட்டுக் கழகம், 2ஆம் இடம்- சிவகுமரன் விளையாட்டுக் கழகம், 3ஆம் இடம்- பொம்மேஸ் விளையாட்டுக் கழகம்

**எல்லே (ஆண்)**-1ஆம் இடம்- மனோகரா விளையாட்டுக் கழகம்,2ஆம் இடம்- டைமன்ஸ் விளையாட்டுக் கழகம், 3ஆம் இடம்- இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகம்.

**எல்லே (பெண்)**-1ஆம் இடம்- மனோகரா விளையாட்டுக் கழகம், 2ஆம் இடம்- இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகம், 3ஆம் இடம்- டைமன்ஸ் விளையாட் டுக் கழகம்.

**கபடி (ஆண்)**-1ஆம் இடம்- பொம்மேஸ் விளையாட்டுக் கழகம், 2ஆம் இடம்- கலைமதி விளையாட்டுக் கழகம், 3ஆம் இடம்- இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகம்.

**கபடி (பெண்)**-1ஆம் இடம்- பொம்மேஸ் விளையாட்டுக் கழகம்,2ஆம் இடம் - மைக்கல் விளையாட்டுக் கழகம்.

**கிரிக்கெட் (ஆண்)**-1ஆம் இடம்- கலைமகள் விளையாட்டுக் கழகம், 2ஆம் இடம்- நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம், 3ஆம் இடம்- நவசக்தி விளையாட்டுக் கழகம்.

**கிரிக்கட் (பெண்)**-1ஆம் இடம்- மனோகரா விளையாட்டுக்கழகம், 2ஆம் இடம்- டைமன்ஸ் விளையாட்டுக் கழகம், 3ம் இடம்- மைக்கல் விளையாட்டுக் கழகம்.

**கரப்பந்து (பெண்)**-1ஆம் இடம்- சிவகுமரன்ஸ் விளையாட்டுக் கழகம், 2ஆம் இடம்- இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகம், 3ஆம் இடம்- மைக்கல் விளையாட்டுக் கழகம்.

**கரப்பந்து (ஆண்)**- 1ஆம் இடம்- சிவகுமரன்ஸ் விளையாட்டுக் கழகம், 2ஆம் இடம்- நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம், 3ஆம் இடம்- திருவள்ளுவர் விளையாட்டுக் கழகம்.

**உதைபந்து (பெண்)**- 1ஆம் இடம்- பொம்மேஸ் விளையாட்டுக் கழகம், 2ஆம் இடம்- மனோகரா விளையாட்டுக் கழகம், 3ஆம் இடம்- டைமன்ஸ் விளையாட்டுக் கழகம்.

**உதைபந்து (ஆண்)**- 1ஆம் இடம்- டைமன்ஸ் விளையாட்டுக் கழகம், 3ஆம் இடம்- கலைமதி விளையாட்டுக் கழகம்.

**பூப்பந்தாட்டம் (பெண்)**- 1ஆம் இடம்- பொம்மேஸ் விளையாட்டுக் கழகம், 2ஆம் இடம்- மைக்கல் விளையாட்டுக் கழகம், 3 ஆம் இடம்- டைமன்ஸ் விளையாட்டுக் கழகம்.

**பூப்பந்தாட்டம் (ஆண்)**-1ஆம் இடம்- ஸ்பேஸ் விளையாட்டுக் கழகம், 2ஆம் இடம்- கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம், 3ஆம் இடம்- மைக்கல் விளையாட்டுக் கழகம்.

**தடகளப்போட்டி (பெண்)**-1ஆம் இடம்- இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகம், 2ஆம் இடம்- பொம்மேஸ் விளையாட்டுக் கழகம், 3ஆம் இடம்- அண்ணாசிலையடி மத்தி விளையாட்டுக் கழகம்.

**தடகளப்போட்டி (ஆண்)**- 1ஆம் இடம்- நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம், 2ஆம் இடம்- மனோகரா விளையாட்டுக் கழகம், 3ஆம் இடங்கள்- இமையாணன் மத்தி விளையாட்டுக்கழகம், டைமன்ஸ் விளையாட்டுக் கழகம் (70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மானிப்பாய் ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தினர் மானிப்பாயில் "மினிகோப் சிற்றி" ஒன்றினையும் காக்கைதீவுப் பகுதியில் புதிய கிளை ஒன்றினையும் அண்மையில் திறந்து வைத்தபோது எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் "மினிகோப் சிற்றி" திறப்பு விழாவில் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பி.சிவலிங்கம் மங்கள விளக் கேற்றுவதை முதல் படத்திலும் காக்கைதீவில் அமைக்கப்பட்ட புதிய கிளையினை சங்கத்தின் தலைவர் இ.வன்னியசேகரம் நாடாவை வெட்டித் திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கலைச்செல்வி, சங்கத்தின் பொது முகாமையாளர் துரைச்சாமி மற்றும் கணக்காளர் வேல்குமரன், சங்கத்தின் வர்த்தக முகாமையாளர் கமலநாதன், கிராமிய அபிவிருத்தி வங்கியின் முகாமையாளர் திருமதி மரியதாசன் மற்றும் பணியாளர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். (9)

# சமாதானம் சஞ்சிகையின் ஆசிரியர் விபத்தில் பலி!

கொழும்பு, மே 11

சமாதானம் சஞ்சிகையின் ஆசிரியரும், கலாபூஷணம், தந்தை செல்வா உள்ளிட்ட உயர் விருதுகளைப் பெற்ற எழுத்தாளருமான மருதமுனையைச் சேர்ந்த மருதூர் வாணர் கடந்த வெள்ளிக்கிழமை மோட்டார் சைக்கிள் விபத்தில் அகால மரணமடைந்தார்.

மருதமுனை பிரதான வீதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவேளை விபத்துக்குள்ளான வாணர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் மரணமடைந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மருதூர்வாணர், இசைவாணர், மருதண்ணா, நிஜராஜா ஆகிய புனை பெயர்களில் எழுதிய இவருக்கு தென்கிழக்கு ஆய்வுமைய விருது, கலாபூசணம், தந்தை செல்வா, தினச்சுடர் உள்ளிட்ட பல உயர் விருதுகள் கிடைத்துள்ளன. (சி)

## முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து

# இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்டோர் இடம்பெயர்ந்துள்ளனர் இவர்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தவர்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் உக்கிர சண்டைகள் நடைபெறும் பகுதிகளில் இருந்து சுமார் 2 இலட்சம் பேர் இடம்பெயர்ந்து வந்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான இணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை போன்ற மாவட்டங்களில் உள்ள வைத்தியாலைகள், நலன்புரி நிலையங்கள் என்பவற்றிலும் வவுனியா மனிக்பாம் பகுதியில் உள்ள நிவாரண கிராமங்களிலும் இவர்கள் தங்க வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் ஒரு லட்சத்து 96 ஆயிரத்து 44பேர் இவ்வாறு இடம்பெயர்ந்து வந்துள்ளனர். இவர்களில் நோயாளர்கள், காயமடைந் தவர்கள் என ஆயிரத்து 741பேர் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் வழித்துணையோடு திருகோணமலை மாவட்டத்திற்கு கப்பல் மூலமாகக் கொண்டு வரப்பட்டிருக்கின்றனர்.

இடம்பெயர்ந்து வந்துள்ளவர்களில் பெரும் எண்ணிக்கையாளனவர்கள் காயமடைந்துள்ளதுடன், நோயாளர்களாகவும் இருக்கின்றனர்.

திருகோணமலை, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மாவட்டங்களின் வைத்தியசாலைகளில், பலர் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அயல் மாவட்ட வைத்தியசாலைகளிலும் இவர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை, குறிப்பாக போர்க்காயங்

### ஐ.நா.அலுவலகம்தகவல்

களுக்கு உள்ளாகி, ஷெல்கள் மற்றும் துப்பாக்கிக்குண்டுத் துகள்கள் உடலில் தாக்கியுள்ளவர்களுக்கு சத்திர சிகிச்சையளித்து பராமரிப்பதற்கென திருகோணமலை மாவட்டத்தில் புல்மோட்டையில் இந்திய அரசின் வெளிக்கள வைத்தியசாலை ஒன்றும், வவுனியா செட்டிக்குளத்தில் பிரான்ஸ் நாட்டின் வெளிக்கள வைத்தியசாலை ஒன்றும் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (203)

# வலி.கிழக்கு பிரதேசசபையின் உப அலுவலகம் புனரமைப்பு

உள்ளூராட்சி திணைக்கள உட்கட்டுமான முன்னேற்ற திட்டத்தின்கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவித் திட்டத்தில் வலி கிழக்கு பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலகம் 172 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இதற்கான அனுமதியினை வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் வழங்கியுள்ளார். இப்புனரமைப்பு பணிக்குரிய திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் விரைவில் புனரமைப்பு பணி ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அச்சுவேலி பொதுச்சந்தைக்கருகில் முன்னர் இயங்கிவந்த இந்தப் பணிமனைக் கட்டடம் கடந்த 1990 ஆம் ஆண்டு முற்றாக அழிவடைந்திருந்தது. தற்காலிகமாக சந்நிதி கோயில் வீதியில் உள்ள தனியார் கட்டடத்தில் இப்பணிமனை தற்போது இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

# அகத் முகாம்களை கண்காணிக்க ஐ.நா.சபைக்கு அனுமதி வழங்குக! இலங்கையிடம் அவுஸ்திரேலியா கோரிக்கை

கொழும்பு, மே 11

இடம்பெயர்ந்த மக்களுக்கான முகாம்களை செஞ்சிலுவைக்குழுவும் ஐக்கிய நாடுகள் சபையும் கண்காணிப்பதற்கு அனுமதி அளிக்கப்படவேண்டுமென அவுஸ்திரேலியா வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும் மோதல் நடைபெறும் பகுதிகளிலிருந்து மக்களை வெளியேற்றும் நடவடிக்கைகளும் அவர்களைத் தங்க வைத்திருக்கும் முகாம்களும் சர்வதேச தராதரத்துக்கு ஏற்ப அமைந்திருக்க வேண்டும் என்றும் அவுஸ்திரேலியா வேண்டுகோள் விடுத்துள்ளது.

மோதல் நடைபெறும் பகுதியில் சிக்கியுள்ள மக்கள் மற்றும் இடம்பெயர்ந்துள்ள 2 லட்சம் மக்கள் குறித்தும் அவுஸ்திரேலியா ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது.

மேலும் இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான உதவியாக ஒரு கோடி டொலர்களை அவுஸ்திரேலியா வழங்கவுள்ளது. (சி)


## பாராட்டு விழாவும் கௌரவிப்பும்

யா/பல்கலைக்கழக நுண்கலைப்பீட பரீட்சை
மேற்பார்வையாளர் (வீணை) திருமதி உதயந்தி கனகராசா
(இசைக்கலைமணி) அவர்களிடம் கர்நாடக சங்கீதம் பயின்று
சித்திபெற்ற மாணவர்களுக்கு பாராட்டுதலும் பரிசில் வழங்கலும்.



விழாவில் கலந்து சிறப்பித்த விருந்தினர்கள்.......

★ உயர்திரு க.நடராசலிங்கம் அவர்கள்
(ஓய்வுபெற்ற அதிபர், யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்)

★ திருமதி ஞானகுமாரி சிவனேசன் அவர்கள்
(ஓய்வுபெற்ற இசைத்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர்)

★ திருமதி கமலராணி ஜெயபாலசிங்கம் அவர்கள்
(இசைத்துறை ஆசிரிய ஆலோசகர், யாழ்.கல்வி வலயம்)

★ திரு அ.செல்வரத்தினம் அவர்கள்
(யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீடம்)

### 2008 க.பொ.த (சா/த) பரீட்சையில் கர்நாடக சங்கீதத்தில் வெற்றிபெற்ற மாணவர்கள்

1. வ.தயாளன் 2. சி.சுகந்தி 3. செ.அருணா
4. த.நிரோசன் 5. ம.கம்சா 6. இ.சங்கீதா
7. கு.யமியரன் 8. இ.யசோதராகி 9. ப.தமிழினி
10. ஜெ.நிரோசா 11. கைலினி



இம் மாணவர்களை
மனமாரப் பாராட்டுவதுடன்
சங்கீத பாடத்துடன் ஏனைய
பாடத்திலும் 8 A பெற்ற
திறமைச் சித்தி எய்திய
மாணவன் செல்வன்
S.தயாளன் அவர்களையும்
பாராட்டுகின்றேன். (சி/558...)



பாராட்டுபவர்:-
முன்னைநாள் கொட்டடி நமசிவாய வித்தியாலய
கர்நாடக சங்கீத ஆசிரியர்
[illegible] அவர்கள்.



## காணி விற்பனை

யாழ்நகர், இல 11/1, மகாத்மா காந்தி வீதியில் (Clock Tower Road) அமைந்துள்ள காணித்துண்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் (யாழ். கூட்டுறவுச்சங்க ஆதனத்தின் அருகாமையில்) 6 1/2 பரப்பு (44 பேர்ச்) (அண்ணளவாக) வங்கி, காட்சி அறை, கடைத் தொகுதிக்கு, தனியார் கிளினிக் என்பவற்றுக்கு உகந்தது.

மேலதிக விவரங்களுக்கு:
*INQUIRIES:* CALL - **D.G.NEWTON**
*PHONE:* 5444420/21-ETN 410
(C/558372) FAX: 5364295



## கண்ணீர் அஞ்சலி



திருமதி
**ஆதிபுவனேஸ்வரி செல்வராசா**
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

எமது பாடசாலை ஆசிரியை திருமதி கயல்விழி ஜெயந்தன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி ஆதிபுவனேஸ்வரி செல்வராசா அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எமது பாடசாலையில் கோயில் கொண்டிருக்கும் நாவலர் ஸ்ரீவித்யா மகா கணபதியை வேண்டுகின்றோம்.

யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம். (சி/558513) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய எல்லையிலுள்ள துருப்புக்களையும் தலிபான்களை அழிக்க பயன்படுத்துவோம்

## பாக். ஜனாதிபதி சர்தாரி அறிவிப்பு

வாஷிங்ரன், மே 11

''இந்திய எல்லையில் நிலைகொண்டுள்ள எமது துருப்புகளை அவசியம் ஏற்பட்டால், தலிபான் தீவிரவாதிகளை எதிர்த்துப் போராடுவதற்காக பாகிஸ்தானின் மேற்குப் பகுதிக்கு நகர்த்துவோம்'' என பாகிஸ்தான் ஜனாதிபதி அஷிப் அலி சர்தார், வாஷிங்ரனில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இதற்கு முன்னர் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கும், சர்தாரிக்குமிடையிலான தனிப்பட்ட சந்திப்பொன்று நிகழ்ந்தது. பாகிஸ்தான் நிலைமை குறித்து கவலையடைந்துள்ள அமெரிக்கத் தலைவர்கள், தலிபான் தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதலை தீவிரப்படுத்துமாறு பாகிஸ்தானை வலியுறுத்தி வந்தார்கள். இந்திய எல்லையில் குவிக்கப்பட்டுள்ள இராணுவச் சிப்பாய்களை தலிபான்கள் தாக்குதல் நடத்தும் மேற்கு எல்லைப் பகுதிக்கு அனுப்பிவைக்குமாறும் கோரி வந்தார்கள்.

இதற்கு பாகிஸ்தான் இணங்கவில்லை. ''இந்தியாதான் பாகிஸ்தானின் முதல் எதிரி. அதனால் இந்தியாவை ஒட்டிய எல்லையில் எமது படைகளின் பிரசன்னம் அவசியம்'' என பாகிஸ்தான் தலைவர்கள் தம் தயக்கத்துக்கும் மறுப்புக்கும் காரணம் கூறி வந்தார்கள்.

இந்த நிலையில் சர்தாரி, முத்தரப்பு மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அமெரிக்க விஜயத்தை மேற்கொண்டார். அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கும் சர்தாரிக்கு மிடையே தனிப்பட்ட சந்திப்பொன்று நிகழ்ந்தது. இதில் பராக் ஒபாமா பாகிஸ்தானின் சந்தேகத்தை நீக்கினார்.

''இந்தியா குறித்த கவலை தேவையற்றது. பாகிஸ்தானிலுள்ள தீவிரவாதிகளாலேயே பாகிஸ்தானின் பாதுகாப்புக்கு ஆபத்து உண்டு. அவர்கள்தான் உண்மையான எதிரிகள். எனவே, இந்திய எல்லையில் குவிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் துருப்புகள், தலிபான்கள் வலுவாகவுள்ள மேற்குப் பகுதிக்கு அனுப்பப்படவேண்டும்'' என இச்சந்திப்பில் ஒபாமா கேட்டுக்கொண்டார்.

இச்சந்திப்பையடுத்து, பத்திரிகையாளர் மாநாடொன்றில் பாகிஸ்தான் ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரி பேசினார். அவர் தொடர்ந்து பேசுகையில், ''பாகிஸ்தானின் மேற்கு எல்லைப் பிராந்தியத்துக்கு ஓரளவு துருப்புகளை அனுப்ப வேண்டிய தேவை ஏற்பட்டது. அதனால் சிறுதொகையினரை அனுப்பி வைத்தோம். தேவை ஏற்பட்டால், மேலும் துருப்புகளை அப்பகுதிக்கு நகர்த்து வோம்'' என்றார்.

''தேவையைக் கருத்திற்கொண்டே நாம் துருப்புகளின் எண்ணிக்கையை நிர்ணயிக்கிறோம். மேற்கு எல்லையில் துருப்புகள் மேலும் தேவைப்பட்டால், இந்திய எல்லையில் நிலைகொண்டுள்ள எமது துருப்புகளையும் அங்கு நகர்த்துவோம்'' என்றும் அஷிப் அலி சர்தாரி தெரிவித்தார்.

''இந்திய எல்லைப் பகுதி சில சமயங்களில் கொந்தளிப்பாகவும், சில சமயங்களில் குளுமையாகவும் இருக்கிறது. ஆனால், ஜனநாயக நாடுகள் ஒன்றுடன் ஒன்று நட்புடன் இருக்கவே விரும்புகின்றன. பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சி இருந்தபோதெல்லாம் இந்தியாவுடன் யுத்தம் ஏற்பட்டதில்லை. இந்தியாவுடனான உறவை மேம்படுத்திக்கொள்ளவே நாங்கள் முயற்சி செய்து வருகிறோம்'' என்றும் அவர் தெரிவித்துக்கொண்டார்.

''அதே நேரத்தில் ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில்தான் அதிக ஆபத்து உண்டு. ஸ்வாட் பகுதியில் இயல்பு நிலை மீளும் வரை இராணுவ நடவடிக்கை நீடிக்கும். தீவிரவாதிகளிடமிருந்து எங்களுக்கு ஆபத்து உண்டு. இதை நாங்கள் நன்கு உணர்கின்றோம். அதற்காக நாட்டை தீவிரவாதிகளிடம் தாரைவார்த்துக் கொடுத்துவிட முடியாது'' என்றும் அவர் கூறினார்.

''தீவிரவாதிகளை எதிர்த்து போராடுவதற்கு எங்களுக்கு அதிக அளவில் ஆயுதங்கள் தேவை. ஹெலிகொப்டெர்கள் தேவை. ஆள் இல்லாமல் பறக்கும் ஹெலிகொப்டெர்கள் தேவை. இவற்றை அமெரிக்கா எமக்கு வழங்கி உதவவேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பாகும்'' என்றும் சர்தாரி குறிப்பிட்டார்.

# பாகிஸ்தான் ஸ்வாட் பகுதியில் 143 தலிபான்கள் உயிரிழப்பு

மின்கோரா,மே 11

பாகிஸ்தானின் ஸ்வாட் பகுதியில் வெள்ளிக்கிழமை இராணுவத்துக்கும், தலிபான் தீவிரவாதிகளுக்குமிடையே ஆரம்பமான சண்டையில் 143 தீவிரவாதிகள் பலியானார்கள். இச்சண்டை மறுதினமான சனிக்கிழமை மாலைவரை நீடித்தது என இராணுவச் செய்தித் தொடர்பாளர் மேஜர் ஜெனரல் அத்தார் அப்பாஸ் தெரிவித்தார்.

''தீவிரவாதிகள் அந்த பகுதியை விட்டு தப்பி ஓடுகிறார்கள். அவர்கள் அப்பாவிகள் தப்பிச் செல்லும் வழிகளை அடைத்து வைத்துள்ளனர். தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையில் 15 ஆயிரம் இராணுவச் சிப்பாய்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்'' என்றும் அவர் கூறினார்.

''ஸ்வாட் பகுதியில் சண்டை நடப்பதால் அப்பாவி பொதுமக்கள் வீடுகளை காலி செய்து விட்டு வெளியேறி வருகிறார்கள். ஏற்கனவே 5 லட்சம் பேர் வெளியேறி விட்டனர். இப்போது மேலும் 2 லட்சம் பேர் அப்பகுதியை விட்டு வெளியேறி வருகின்றனர். மேலும் 3 லட்சம் பேர் வெளியேற தயாராகி வருகின்றனர்'' என்றும் அவர் விளக்கினார்.

ஸ்வாட் பள்ளத்தாக்கிலுள்ள தலிபான் தீவிரவாதிகளை அகற்ற இராணுவம் தாக்குதலை தொடங்கியது. இங்கு 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் உள்ளனர். இவர்களை விரட்டியடிக்க 15 ஆயிரம் இராணுவச் சிப்பாய்கள் குவிக்கப்பட்டுள்ளனர்.

இரு தரப்புக்குமிடையே கடும் சண்டை நடந்து வருகிறது. தலிபான்கள் பொதுமக்களை கேடயமாகப் பயன்படுத்தி இராணுவத்திடம் சண்டையிடுகின்றனர்.

இருதரப்பு சண்டையில் சிக்கி பொதுமக்கள் பலியாகிவிடுகின்றனர். இதனால் அங்குள்ள மக்களை வெளியேறி விடுமாறு அரசும் உத்தரவிட்டுள்ளது.

இப் பகுதியில் முழு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனினும், பொது மக்கள் வெளியேறுவதற்கு வசதியாக ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டுள்ளது.

# பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க தென்னாபிரிக்கா தயாராக வேண்டும்

## புதிய ஜனாதிபதி அழைப்பு

டர்பன்,மே 11

''உலகப் பொருளாதார நெருக்கடியிலிருந்து தென்னாபிரிக்காவாலும் தப்ப முடியாது. இதற்கு நாம் முகங்கொடுக்க வேண்டும்'' என தென்னாபிரிக்காவின் புதிய ஜனாதிபதியாக, சனிக்கிழமை சம்பிரதாயபூர்வமாக பதவியேற்ற ஜேக்கப் சூமா, தமது அங்குராப் பண உரையில் குறிப்பிட்டார்.

''பொருளாதார நெருக்கடிகளால் உலகெங்கணும் பெருந்தொகையானோர் தம் பதவிகளை இழந்து வருகின்றனர். இந்த நெருக்கடிகளுக்கு நம் நாடும் இலக்காகும். பலர் வேலைகளை இழக்க நேரிடும். எனவே, நாம் எச்சரிக்கையுடன் செயற்படவேண்டும்'' என்றும் அவர் கூறினார்.

''தென்னாபிரிக்காவில் தடுக்கக்கூடிய நோய்களுக்கு இலக்கானோரும் பலியாகி வருகின்றனர். கிராமங்களில் சுத்தமான குடி தண்ணீர் கிடையாது. மக்கள் குடியிருப்புக்கு



ஏற்ற வீடுகள் கிடையா. தக்க மருந்து வசதிகள் இல்லை. வாழ்க்கைத் தரம் மோசமாகவுள்ளது. இந்த அவலங்களுக்கு முடிவு கட்டப்படவேண்டும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''மக்களை ஆட்டிப்படைக்கும் அவலங்களுக்கு முடிவு கட்டும் பொருட்டு, நான் முனைப்புடன் செயற்படுவேன். என்னால் ஓய்ந்திருக்க முடியாது. மேம்பாட்டுத் திட்டங்களைத் துரிதமாகவும் பரவலாகவும் நடைமுறைப்படுத்த அனைவரினதும் ஒத்துழைப்பும் தேவை'' என்றும் சூமா கேட்டுக்கொண்டார்.

''தென்னாபிரிக்காவில் நிறத் துவேஷ ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்டுவிட்டது. புதிய சகாப்த உதயத்துக்கு வழி சமைத்தவர்களில் அதிமுக்கிய தேசத் தந்தை நெல்சன் மண்டேலா ஆவார். அவரின் தேசிய நல்லிணக்கப்பாட்டுக் கொள்கைகளையே நான் தொடர்ந்தும் பின்பற்றுவேன்'' என்றும் அவர் தெரிவித்துக் கொண்டார்.

தென்னாபிரிக்காவில் நிற வேற்றுமை ஆட்சி ஒழிந்த பின்னர் இடம்பெற்ற நான்காவது தேர்தலில் [illegible] பெற்று, ஜனாதிபதியாகியுள்ளார்.

# மியான்மர் எதிர்க்கட்சித் தலைவி ஆங்சான் சூவின் உடல் நிலை மோசம்

யாங்கூன், மே 11

மியான்மரின் எதிர்க்கட்சித் தலைவி ஆங் சான் சூ கீயின் உடல்நிலை தொடர்ந்து மோசமாக உள்ளது என அவரது கட்சியின் செய்தித் தொடர்பாளர் யான் வின் சனிக்கிழமை தெரிவித்தார். சூ கீயால் சரிவர சாப்பிட முடியவில்லை. அவரது இரத்த அழுத்தமும் குறைவாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

''சூ கீயை பரிசோதித்து வரும் மருத்துவரின் உதவியாளர் வெள்ளிக்கிழமை அவரை பரிசோதித்து நரம்பு மூலமாக அவருக்கு டிரிப்ஸ் ஏற்றினார். மூன்று மணி நேரம் அவருடன் இருந்து உடல்நிலையைக் கண்காணித்தார்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''சூ கீ நல்ல உடல்நலத்துடன் இல்லை. அவரால் சாப்பிட முடியவில்லை. அவரது உடலில் நீர்ச்சத்து குறைந்துள்ளது. குறைந்த இரத்த அழுத்தத்துடன் அவர் உள்ளார்'' என்றும் யான் வின் தெரிவித்தார்.

# பங்களாதேஷ் பிரதமரின் கணவர் வஜத் மியா காலமானார்

பிரதமர் ஷேக் ஹசீனாவின் கணவரும், அணு விஞ்ஞானியுமான வஜத் மியா சனிக்கிழமை காலமானார். அவருக்கு வயது 67. அவர் நீரிழிவு, இரத்த அழுத்தம், சிறுநீரக கோளாறு, இருதய கோளாறு ஆகிய உபாதைகளுக்காக பல மாதங்களாக சிகிச்சை பெற்றுவந்தார்.

இந்த நிலையில், கடந்த வியாழக்கிழமை அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. அவர் உடனடியாக தலைநகர் டாக்காவிலுள்ள ஒரு தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு சனிக்கிழமை பிற்பகலில் அவரது உயிர் பிரிந்தது. அப்போது அவரது மனைவியும், பிரதமருமான ஷேக் ஹசீனா உடனிருந்தார்.

கட்சி வேறுபாடு இன்றி, பலர் வஜத் மியா உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். இவரின் 2 பிள்ளைகளும் அமெரிக்காவில் வசித்து வருகிறார்கள்.

# மதத்தை திரிபுபடுத்தி போதனை செய்யாதீர்!

## பாப்பரசர் வலியுறுத்து

''மதத்தை திரிபுபடுத்தி போதிக்கக் கூடாது. மத அர்த்தத்தை திரிபுபடுத்துவதால் சமுதாயத்தில் பேத, பிணக்குகளும், வன்முறைகளும் தலையெடுக்கின்றன'' என பாப்பரசர் பதினாறாவது ஆசீர்வாதப்பர், ஜோர்தானில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மத்திய கிழக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள பதினாறாவது ஆசீர்வாதப்பர் ஜோர்தானுக்கும் வருகை புரிந்தார். அவர் ஜோர்தானின் தலைநகரான அம்மானிலுள்ள மசூதி ஒன்றில், முஸ்லிம் தலைவர்கள் மத்தியில் உரையாற்றினார்.

பாப்பரசர் இங்கு தொடர்ந்து பேசுகையில், ''இஸ்லாம் வன்முறையானது என 2006 ஆம் ஆண்டு, கிறிஸ்தவ போதகர் ஒருவர் தெரிவித்தார். இது ஆட்சேபனைக்குரிய ஒரு கருத்து. மற்றவர்களைப் புண்படுத்தக் கூடியது'' என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

''இந்த பேரரசரின் அபத்தமான கருத்தால் முஸ்லிம்கள் வருத்தம் அடைந்தார்கள். அதற்காக நான் மன்னிப்புக் கேட்டுக்கொண்டேன். இந்த பேரரசரின் கருத்தை மற்றவர்களைப் போல நானும் ஏற்றுக்கொள்ளவில்லை'' என்றும் பாப்பரசர் விவரித்தார்.

## உலக அரங்கில்

# பாக். ஜனாதிபதி – பிரதமரின் குடும்பங்களை ஒழித்துக்கட்ட தலிபான் தீர்மானம்

இஸ்லாமாபாத், மே 11

பாகிஸ்தான் ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரி, பிரதமர் யூசுப் ரஜா கிலானி ஆகியோரையும், அவர்களது குடும்பங்களைச் சேர்ந்தோரையும் ஒழித்துக்கட்ட தலிபான் தீவிரவாதிகள் உறுதி பூண்டுள்ளார்கள்.

பாகிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளுக்கு எதிரான போரை அரசு முழு வீச்சில் மேற்கொண்டுள்ளது. இதனால் தலிபான்கள் ஆத்திரமடைந்துள்ளார்கள். இச்சமயத்தில் தலிபான் தளபதி ஒருவர், ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.

இத்தளபதி பாகிஸ்தான் பத்திரிகையொன்றுக்கு தொலைபேசி வாயிலாகத் தாம் அளித்துள்ள பேட்டியொன்றில், ''ஜனாதிபதியையும், பிரதமரையும் ஒழித்துக்கட்டுவோம்'' என சூளுரைத்துள்ளார்.

''பிரதமர் யூசுப் ரஜா கிலானி இஸ்லாத்தில் ஊறித் திளைத்த குடும்பமொன்றைச் சேர்ந்தவர். அதனால் அவர் இஸ்லாமிய ஷரி - ஆ சட்டத்தை மால்காண்டு பகுதியில் நடைமுறைப்படுத்த ஆதரவளிப்பார் என நாங்கள் நம்பினோம். எனினும், எம் நம்பிக்கை பலிதமாகவில்லை'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''இதற்கு மாறாகப் பிரதமர், எங்களுக்கு எதிராக முழு வீச்சில் போரை ஆரம்பித்துள்ளார். அத்துடன் ஸ்வாட் பகுதியிலிருந்து தலிபான்களை ஒழித்துக்கட்டும்வரை இராணுவ நடவடிக்கை நீடிக்கும் என்றும் அறிவித்துள்ளார். இவரை குடும்பத்தோடு ஒழித்துக்கட்டுவதற்கு நாம் முடிவு கட்டிவிட்டோம்'' என்றும் அந்தத் தளபதி தெரிவித்துள்ளார்.

''நாங்கள் ஆளும் கூட்டணியிலுள்ள உயர் மட்டத் தலைவர்களை ஒழித்துக்கட்டத் திட்டமிட்டுள்ளோம். ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரையும், அவர்களின் குடும்பத்தினரையும் தீர்த்துக்கட்டுவோம். இதற்குக் கொஞ்சம் கால அவகாசம் தேவை. இது ஒன்றும் முடியாத காரியம் அல்ல. இதைச் செயற்படுத்த எங்களிடம் எல்லா வசதிகளும் வாய்ப்புகளும் உள்ளன'' என்றும் அவர் கூறியுள்ளார். எனினும், அத்தளபதி தன்னை அடையாளப் படுத்திக்கொள்ள முன்வரவில்லை.

# நீதிபதி இருமிக்கொண்டிருந்தமையால் சட்டத்தரணிகள் தலைதெறிக்க ஓட்டம்

## பன்றிக் காய்ச்சல் பீதி படுத்தும்பாடு!

ரோம்,மே 11

இத்தாலி நீதிமன்றமொன்றில் அடிக்கடி இருமிக்கொண்டிருந்த நீதிபதியைப் பார்த்த சட்டத்தரணிகள், பன்றிக்காய்ச்சல் பீதியால் நீதிமன்றத்தை விட்டு அவசர அவசரமாக வெளியேறி ஓடிவிட்டார்கள். நீதிபதியும் விசாரணையை ஒத்திவைத்து விட்டு, வீட்டுக்குப் புறப்பட்டு விட்டார்.

நீதிபதி கியோவன்னி பரேசே, ரோம் நகரைச் சேர்ந்தவர். இவர் நீதிமன்றத்தில் விசாரணை ஒன்றை மேற்கொண்டார். அப்போது அடிக்கடி இருமிக்கொண்டே இருந்தார். சில சமயங்களில் கட்டுப்படுத்த முடியாத இருமலால் அவர் அவதிப்பட்டார்.

இத்தகைய இருமல் பன்றிக்காய்ச்சலுக்கான அறிகுறியாகும். இதனால் சந்தேகங்கொண்ட சட்டத்தரணிகளில் ஒருவர் நீதிபதியை நோக்கி, ''நீங்கள் பன்றிக்காய்ச்சலுக்கான அறிகுறியால் அவதிப்படுகிறீர்களா? அல்லது தொண்டையை சரிசெய்து கொள்கிறீர்களா?'' எனக் கேட்டார்.

இதற்கு நீதிபதி கியோவன்னி பரேசே, ''நான் நேற்றுத்தான் மெக்ஸிக்கோவிலிருந்து வந்தேன்'' என்றார். இதனால் சட்டத்தரணிகளின் சந்தேகம் வலுத்துவிட்டது. மெக்ஸிக்கோவில்தான் பன்றிக் காய்ச்சல் ஆரம்பமாகியது. அங்கு இத்தொற்றுநோய்க்கு நூற்றுக்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

நீதிபதி மெக்ஸிக்கோவிலிருந்து நேற்றுதான் தாம் வந்தார் எனக் கூறியதைக் கேட்டு, சட்டத்தரணிகள் திகில் அடைந்தனர். முன்னர் கேள்வி கேட்ட சட்டத்தரணி நீதிபதியை மீண்டும் பார்த்து, ''நிலைமை மோசமாகி விடக் கூடாது. நாங்கள் வெளியேறுகிறோம்'' என்றார்.

''உங்களை பன்றிக்காய்ச்சல் தாக்காமல் கூட இருக்கலாம். ஆனால், எங்களால் அசிரத்தையாக இருந்துவிட முடியாது. நீங்கள் பணிக்கு வராமல் கூட இருந்திருக்கலாம். இந்நீதிமன்றத்தில் நிறையப் பேர் உள்ளனர். அதனால், தொற்றுநோய் எளிதில் பரவுவதற்கான வாய்ப்பு உண்டு'' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

''நாங்கள் 30 பேர் இங்கு சட்டத்தரணிகளாக இருக்கிறோம். பீதிக்கு மத்தியில் எங்களால் பணி செய்ய முடியாது. எனவே, நாங்கள் வெளியேறுகிறோம்'' என சட்டத்தரணிகள் தெரிவித்துவிட்டு, நீதி மன்றத்தைவிட்டு வெளியேறினார்கள். நீதிபதியும் விசாரணையை ஒத்திவைத்துவிட்டு வீட்டுக்குக் கிளம்பிவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவே கதறுகிறது ஈழத்தமிழருக்காக; கரிசனையற்று இருக்கின்றது மத்திய அரசு

## குஜராத் முதல்வர் நரேந்திரமோடி குமுறல்

நாகர்கோவில், மே 11

இலங்கையில் தமிழர்களுக்காக இந்த நாடே கண்ணீர் விடுகிறது, வேதனைப் படுகிறது. ஆனால் மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை - என்று குஜராத் முதல்வர் நரேந்திரமோடி வேதனையுடன் கூறினார்.

நாகர்கோவில் நாகராஜா திடலில் நேற்று முன்தினம் நடந்த பா.ஜ.கவின் தேர்தல் பிர சாரப் பொதுக் கூட்டத்தில் சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு -

இந்த நாடு சுதந்திரம் அடைந்து 60 ஆண்டுகள் ஆகின்றன. 55 ஆண்டுகள் ஒரே கட்சி ஆட்சியில் இருந்துள்ளது. 52 ஆண்டுகள் ஒரே குடும்பம் ஆட்சியில் இருக்கிறது. இந்த ஆட்சியால் உங்களுக்கு என்ன கிடைத்திருக்கிறது என்று யோசித்துப் பாருங்கள். அதற்கு என்ன காரணம்? முக்கிய காரணம் வாக்கு வங்கி அரசியல். அது உள்ளுக்குள் இருந்து பலவீனப்படுத்திவிட்டது.

இன்றைய ஆட்சியாளர்களால் ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வால் ஏழை, எளியவர்கள் பட்டினியோடு வாழ்ந்து வருகிறார்கள்.

பிரதமர் மன்மோகன்சிங் பலவீனமான பிரதமர் என்றால் அவருக்கு கோபம் வருகிறது. அவரது உடல் பலவீனத்தை பற்றி நாங்கள் பேசவில்லை. பிரதமர் பதவிக்கான கௌரவத்தை அவர் இழக்கச்செய்துவிட்டார்.

வலிமை மிக்க பிரதமராக அவர் இருந்திருந்தால், இலங்கையில் தமிழ்ச் சகோதரர்களுக்கு எதிராகக் கொடுமை இழைக்கப்படுகிறதே. அதை ஏன் இவர் தடுக்கவில்லை? மத்திய அரசு பலமான அரசாக இருக்குமானால் இலங்கையில் உள்ள தமிழ்ச் சகோதரர்களுக்கு எதிராக தொடர்ந்து அநீதி இழைக்கப்படுவதை ஏன் தடுக்கவில்லை. இந்த நாடே இலங்கை தமிழர்களுக்காக கண்ணீர் விடுகிறது. வேதனைப்படுகிறது. ஆனால் மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் வேண்டுமா? நியமிக்கப்பட்ட பிரதமர் வேண்டுமா? ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமராக இருந்தால் அவர் முடிவுகளை எடுப்பதில் உறுதியாக இருப்பார்.

இந்த நாட்டின் ஊழல்வாதிகள், திருடர்கள், கொள்ளையர்கள் ஏழை மக்களின் பணத்தை சுருட்டி 25 லட்சம் கோடி ரூபா முதல் 75 லட்சம் கோடி ரூபா வரை சுவிட்ஸர்லாந்து வங்கியில் போட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. அந்தப் பணத்தை மீட்டு இந்தியாவுக்குக் கொண்டுவரப்படும் என்று அத்வானி கூறியிருக்கிறார்.





நாகர்கோவில் நாகராஜா திடலில் நேற்றுமுன்தினம் நடந்த பா.ஜ.க. தேர்தல் பிரசார பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட குஜராத் முதல்வர் நரேந்திர மோடி, கன்னியாகுமரி மக்களவை தொகுதி பா.ஜ.க. வேட்பாளர் பொன். ராதாகிருஷ்ணனை அறிமுகம் செய்து வைக்கின்றபோது..........

உங்களது விரலுக்கு அபாரமான சக்தி இருக்கிறது. அது உங்களுக்குத் தெரியாது. பகவான் ஸ்ரீகிருஷ்ணனின் விரலுக்கு இருந்த சக்தியைவிட 2 மடங்கு அதிகமான சக்தி உங்கள் விரலுக்கு இருக்கிறது. வாக்குப் பதிவின்போது உங்கள் விரலால் தாமரைச் சின்னத்துக்கான பொத்தானை நீங்கள் அழுத்தும்போது ஒரு அரசை கீழே இறக்கப்போகிறீர்கள். இன்னொரு அரசை மேலே கொண்டுவரப்போகிறீர்கள் என்பதுதான் அந்த சக்தி.

தாமரை என்றால் தூய்மை. பா.ஜ.க. என்றால் தூய்மையான ஆட்சி. எனவே உங்களது வாக்கு பா.ஜ.கவுக்குத்தான் இருக்க வேண்டும் என்று கேட்டு விடை பெறுகிறேன் - என்றார்.

# தமிழ் ஈழம் குறித்து தனது கருத்தை சோனியாகாந்தி தெரிவிக்கவேண்டும்

## வெங்கையாநாயுடு கோரிக்கை



சென்னை, மே 11

தமிழ்நாட்டுக்குத் தேர்தல் பிரசாரத்துக்கு வரும் சோனியா காந்தி தமிழ் ஈழம் குறித்து தங்கள் நிலையை விளக்க வேண்டும் - என்று பாரதீய ஜனதாக் கட்சியின் முன்னாள் தலைவர் வெங்கையா நாயுடு கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு-

தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் நான் தேர்தல் பிரசாரச் சுற்றுப்பயணம் செய்துள்ளேன். தமிழ்நாட்டு மக்கள் காங்கிரஸ் மீது கோபமாகவும், தி.மு.க. மீது அதிருப்தியிலும் இருக்கிறார்கள்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மத்திய அரசு எதுவுமே செய்யவில்லை. மூத்த அமைச்சர் பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்பியது, அவர் என்ன சாதித்தார். எம்.கே.நாராயணன் சென்றார், ஒன்றும் நடக்கவில்லை.

ராகுல்காந்தி தமிழ்நாட்டில் ஒரு சிறுவனை அழைத்து வருவது போல படங்கள் வெளியானது. இலங்கையில் சிறுவர்களும், தமிழர்களும் அழுகிறார்கள். இங்கு சிறுவனை அழைத்துச் செல்வதால் என்ன பயன்?

இலங்கையில் போரை நிறுத்திவிட்டோம் என மஹிந்த ராஜபக்ஷ கூறவில்லை. கனரக ஆயுதங்கள் பயன்படுத்தப்படமாட்டாது என்று தான் கூறியிருக்கிறார். அப்பாவித் தமிழர்களை கொல்ல கனரக ஆயுதம்தான் வேண்டுமா?.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி உடைந்து கொண்டிருக்கிறது. கட்சிகள் வெளியேறிக் கொண்டிருக்கின்றன. காங்கிரஸ் எல்லாக் கட்சிகளையும் சந்தேகிக்கிறது, அவமரியாதை செய்கிறது. இதனால் எந்தக் கட்சியும் காங்கிரஸை நம்ப மறுக்கிறது. இதன் காரணமாக தனது கூட்டணிக் கட்சிகளை காங்கிரஸ் இழந்து வருகிறது.

இப்போது கருணாநிதி இலங்கையில் தமிழ் ஈழம் அமைய வேண்டும் என்று கூறுவது தேர்தலுக்காகத்தான். சென்னை வரும் சோனியா காந்தி தமிழ் ஈழம் குறித்து தனது கருத்தை தெரிவிக்க வேண்டும். இலங்கையில் முதலில் உடனடியாக போரை நிறுத்தி, மறுசீரமைப்புப் பணிகளைத் தொடங்க வேண்டும். தமிழர்களுக்கு அனைத்து நிலைகளிலும் சமஉரிமை வழங்கப்பட வேண்டும் என்பதுதான் எங்கள் நிலை. இதற்கு அமையவிருக்கும் எங்கள் கூட்டணி அரசு பாடுபடும் - என்றார்.

# பற்றி எரியும் ஈழத் தமிழர் பிரச்சினையில் தமிழகக் கட்சிகள் குழம்பிப் போயுள்ளன

## விஷ்வ இந்து பரிஷத் தலைவர் பேட்டி



சென்னை, மே.11

பற்றி எரியும் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழக அரசியல் கட்சிகள் குழம்பிப் போயுள்ளன - என்று விஷ்வ இந்து பரிஷத்தின் அகில இந்தியத் தலைவர் அசோக் சிங்கல் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் கூறியவை வருமாறு-

இலங்கையில் தமிழ் பேசும் இந்துக்களை அந்நாட்டு அரசு படுகொலை செய்து வருகிறது. இலங்கையிலிருந்து லட்சக்கணக்கான இந்துக்கள் ஐரோப்பா, இந்தியா உள்ளிட்ட நாடுகளில் தஞ்சம் புகுந்து வருகின்றனர். இதைத் தடுத்து நிறுத்த மத்திய அரசால் முடியவில்லை.

இலங்கையில் இன்று நடப்பது போன்றே கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து ஒரு கோடிக்கும் அதிகமான இந்துக்கள் அகதிகளாக வந்தபோது அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி எடுத்த உறுதியான நிலைப்பாட்டால் வங்காளதேசம் உருவானது. இன்று இலங்கையிலும் அதே சூழ்நிலைதான் உள்ளது. அதேநேரத்தில் இந்திய அரசுக்கு உறுதியான செயற்திட்டமும், சாதுர்யமும் இல்லை.

இலங்கைப் பிரச்சினை என்பது வெறும் தமிழர்கள் பிரச்சினை மாத்திரமல்ல. இது உலகளாவியுள்ள இந்துக்களின் பிரச்சினை. இலங்கை இந்துக்களுக்கு, பாரதத்தில் உள்ள நூறு கோடி இந்துக்களும் பக்கபலமாக நின்றிருக்க வேண்டும். ஆனால் தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகள் குழம்பிப் போயுள்ளதோடு, சரியான தீர்வைக் கூற முடியாமல் மக்களை குழப்பி வருவதால் இந்தப் பிரச்சினை வெறும் தமிழர் பிரச்சினையாக மட்டும் பார்க்கப்படுகிறது.

இலங்கை அரசு அங்கே தமிழ் பேசும் இளைஞர்களை வெளியேற்றி விட்டு அந்த இடத்தில் சிங்களவர்களைக் குடியேற்றி வருகிறது. இவையெல்லாம் நடப்பதற்கு காரணம் மத்திய அரசு பலவீனமாக இருப்பதுதான். காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, ராகுல் காந்தி ஆகியோர் இந்துக்களுக்கு விரோதமாகச் செயற்பட்டு வருகின்றனர். இலங்கைத் தமிழர்களுக்குச் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்பது தான் எங்களுடைய எண்ணம் - என்றார்.



உடல் நலக்குறைவு காரணமாக சென்னை அப்பல்லோ வைத்தியசாலையில் இருக்கும் தமிழக முதல்வர் கருணாநிதியை பிரதமர் மன்மோகன் சிங் நேரில் சென்று நலம் விசாரித்த போது...........

# வீடு திரும்பினார் கருணாநிதி

சென்னை, மே 11

தமிழக முதல்வர் கருணாநிதி அப்பல்லோ வைத்தியசாலையிலிருந்து நேற்றுமுன்தினம் இரவு வீடு திரும்பினார்.

சிறுநீர்ப் பாதை நோய்த் தொற்று காரணமாக காய்ச்சல் ஏற்பட்டு கடந்த மே 3ஆம் திகதி அப்பல்லோ வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டார்.

தொடர்ந்து சிகிச்சை பெறவேண்டியிருந்ததால், முதல்வரின் தேர்தல் பிரசார கூட்டங்கள் ரத்து செய்யப்பட்டன.

உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து அவர் சனிக்கிழமை வீடு திரும்பினார்.

# தமிழகத் தேர்தல் பாதுகாப்புப் பணிக்காக கூடுதலாக 3,500 துணை இராணுவத்தினர்

சென்னை, மே 11

தமிழகத் தேர்தல் பாதுகாப்புப் பணிக்காக கூடுதலாக 3,500 துணை இராணுவப்படையினர் தமிழகம் வருகின்றனர் எனக் கூறப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுவையில் உள்ள 40 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும் 13ஆம் திகதி தேர்தல் நடைபெறுகிறது. இந்தத் தேர்தல் பாதுகாப்புப் பணிக்காக மத்திய தொழிற்சாலை பாதுகாப்புப் படை, மத்திய பொலிஸ் படை உட்பட 94 கம்பனிகளைச் சேர்ந்த 10 ஆயிரம் துணை இராணுவப்படையினர் ஏற்கனவே தமிழகம் வந்துள்ளனர்.

இந்த நிலையில் மேலும் 50 கம்பனி துணை இராணுவப்படைகளை அனுப்பி வைக்க வேண்டும் என்று தமிழக அரசு கோரியிருந்தது. உடனடியாக, 35 கம்பனிகளை அனுப்ப மத்திய அரசு சம்மதம் தெரிவித்துள்ளது.

தற்போது வடமாநிலங்களில் 4 கட்டத் தேர்தல் முடிந்துவிட்டதால், அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்ட துணை இராணுவப்படையினர் 3,500 பேர் தமிழகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். முதல்கட்டமாக, ஒரிசாவில் இருந்து நேற்றுமுன்தினம் நள்ளிரவு 10 கம்பனிகளை சேர்ந்த சுமார் ஆயிரம் துணை இராணுவப்படையினர் சென்னை எழும்பூர் ரயில் நிலையம் வந்தனர்.


# ஈழத் தமிழர்கள் படுகொலை குறித்து ஐ.நா. கேட்கும்போது இந்தியாவின் அமைதி ஏன்?

## அன்புமணி ராமதாஸ் கேள்வி

மதுராந்தகம், மே 11

இலங்கைத் தமிழர் படுகொலை பற்றி ஐ.நா. சபை, அமெரிக்கா, லண்டன் போன்ற வெளிநாடுகள் இலங்கையைக் கேட்கின்றன. கவலை கொள்கின்றன. ஆனால் இந்தியா மட்டும் அமைதியாக மௌனம் சாதிப்பது ஏன் - என்று டாக்டர் அன்புமணி ராமதாஸ் கேள்வியெழுப்பியுள்ளார்.

காஞ்சிபுரத்தில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு -



இந்தத் தேர்தல் நியாயமாக நடக்க வேண்டும். ஜனநாயக முறையில் நடக்க வேண்டும். இலங்கைத் தமிழர் படு கொலை பற்றி ஐ.நா. சபை, அமெரிக்கா, லண்டன் போன்ற வெளிநாடுகள் இலங் கையைக் கேட்கின்றன. கவலை கொள்கின்றன. ஆனால் இந்தியா மட்டும் அமைதியாக மௌனம் சாதிப்பது ஏன்? -என்று கேள்வி எழுப்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுமினி- ரஹானே அதிரடி ஆட்டம்; பெங்களூரை வீழ்த்தியது மும்பை

DLF IPL

போர்த் எலிஸபெத் மே,11

டுமினி-ரஹானே ஜோடியின் அபாரமான இணைப்பாட்டத்தினால் நேற்று நடைபெற்ற ஐ.பி.எல் ருவென்ரி-20 போட்டியில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியினை 16 ஓட்டங்களினால் தோற்கடித்தது மும்பை இந்தியன்ஸ் அணி.

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் இரண்டாவது ஐ.பி.எல் ருவென்ரி -20 போட்டித் தொடரின் 38 ஆவது ஆட்டம் போர்த் எலிஸபெத்தின் சென்.ஜோர்ஜஸ் மைதானத்தில் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் அனில் கும்ளே தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும் சச்சின் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் மோதின.

இதில் நாணயச் சழற்சியில் வெற்றி பெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி முத



லில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

மும்பை இந்தியனஸ் அணிசார்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் சேர்க்கப்படாத அதிரடி வீரர் சனத் ஜெயசூரியா இப்போட்டியில் இடம்பெற்றிருந்தார். அணி 5 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை வினய்குமார் வீசிய பந்தை எதிர் கொண்ட டெண்டுல்கர் பௌச்சரிடம் பிடி கொடுத்து ஓட்டமெதனையும் பெறாத நிலையில் வெளியேறினார்.

அதிரடி வீரர் ஜெயசூரியா 29 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் வான்டேர் மேர்வினால் எல்.பி.டபிள்யூ முறையில் வெளியேற்றப்பட ரஹானேயுடன் ஜோடிசேர்ந்தார். தென்னாபிரிக்காவின் இளம் அதிரடி வீரர் டுமினி இருவரும் இணைந்து தமக்கிடையே 104 ஓட்டங்களைஆட்டமிழக்காது பகிர்ந்து கொண்டனர். இதில் 49 பந்துகளை எதிர்கொண்ட ரஹானே (4 பௌண்டறிகள், ஒரு சிக்ஸருடன்) 62 ஓட்டங்களையும் டுமினி 41 பந்துகளுக்கு முகம் கொடுத்து (2 பௌண்டறிகள், 3 சிக்ஸர்களுடன்) 59 ஓட்டங்களையும் பெற்றனர். 20 ஓவர் நிறைவில் மும்பை இந்தியன்ஸ் 2 விக்கெட்டுகளை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்று பெங்களூர் அணிக்கு 158 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

பதிலுக்குத் துடுபெடுத்தாடிய பெங்களூர் அணி 20 ஓவர்கள் நிறைவில் 141 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதில் கலிஸ் (12), கோலி (20), உத்தப்பா (4), ரெய்லர் (16), ராவிட் (10), வான்டேர் மேர்வ் (3), வினய்குமார் (7) என சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பௌச்சர் மாத்திரமே' தனித்து நின்று போராடி 48 ஓட்டங்களையும் (ஒரு பௌண்டறி, 2 சிக்ஸர்கள்), கும்ளே 7 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றனர்.

**இன்றைய ஆட்டங்கள்**

முதலாவது ஆட்டம்

அணிகள் : டெக்கான் சார்ஜர்ஸ் - ராஜஸ்தான் ரோயல்ஸ்

மைதானம் : கிம்பர்லி

நேரம் : இரவு 8 மணி

போட்டியின் நாயகனாக மும்பை இந்தியன்ஸ் அணியின் டுமினி தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் ஓர் இடம் முன்னேறியுள்ளது மும்பை இந்தியன்ஸ் அணி. அடுத்து வரும் அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெற்றால் இலகுவாக அரையிறுதிக்குச் சென்று விடும் வாய்ப்பு உள்ளது. அடுத்துவரும் போட்டிகள் ஏனைய அணிகளுக்கும் முக்கியமானவையாக இருப்பதனால் இனிவரும் போட்டிகள் மிகவும் விறுவிறுப்பானவையாக அமையும். (1-6)

**ஐ.பி.எல். அணிகளின் தற்போதைய நிலை**

| அணி | ஆட்டம் | வெற்றி | தோல்வி | சமனிலை | புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| டில்லி டெவில்ஸ் | 9 | 7 | 2 | 0 | 14 |
| சென்னை சூப்பர் கிங்ஸ் | 10 | 6 | 3 | 1 | 13 |
| ராஜஸ்தான் ரோயல்ஸ் | 10 | 5 | 4 | 1 | 11 |
| டெக்கான் சார்ஜஸ் | 9 | 5 | 4 | 0 | 10 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 10 | 5 | 5 | 0 | 10 |
| மும்பை இந்தியன்ஸ் | 10 | 4 | 6 | 1 | 09 |
| பெங்களூர் சாலஞ்சர்ஸ் | 9 | 4 | 5 | 0 | 08 |
| கொல்கத்தா ரைடர்ஸ் | 9 | 1 | 7 | 1 | 03 |

# 7 ஆவது வெற்றியுடன் வீறுநடை போடும் டெல்லி

ஜெகன்னர்ஸ் பேர்க், மே 11

நேற்று நடந்த போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை 7 விக்கெட்டுக்களினால் வீழ்த்தி ஏழாவது வெற்றியுடன் வீறுநடை போடுகிறது டெல்லி டேர் டெவில்ஸ் அணி.

ஐ.பி.எல் ருவென்ரி 20 போட்டிகளில் 39 ஆவது ஆட்டமாக நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் மக்கலம் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைர்ஸும் கம்பீர் தலைமையிலான டெல்லி டேர் டெல்விஸ் அணியும் மோதின.

கொல்கத்தா சார்பில் துடுப்பெடுத்தாடிய மக்கலம் (6), ஹேட்ஜ்(0), வான் வைக் (0), யஷ்பல் சிங் (13), ஷா (0), ஹென்றியுஸ் (2) என வெளியேற கங்குலி 44 ஓட்டங் களைப் பெற்று வோர்ணரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அஹார்கர் 39 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற கொல்கத்தா 8விக்கட்டுகளை இழந்து 123 ஓட்டங்க ளைப் பெற்றது.

டெல்லி அணி சார்பில் பந்து வீசிய மிஸ்ரா 14 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுக ளையும் நெஹ்ரா, நானெஸ் ஆகியோர் தலா 2 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

124 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றிஎன்ற இலக்குடன் களமிறங்கிய டெல்லி சார்பில் கம்பீர் (18) வோர் ணர் (36) டில் ஷான் (1) என வெளியேற டீ.வி.வில்லியர்ஸ் ஆட்டமிழக்காது 40 ஓட்டங்களையும் டினேஸ் கார்த்திக் 17 ஓட்டங்களையும் பெற 17.1 ஓவர் நிறைவில் 3 விக்கட்டுகளை இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது.இஷாந்சர்மா 2 விக்கட்டுகளை வீழ்த்தினார். (1-6)

# தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்கள் கொண்டு தாக்கியதில் வன்னியில் மக்களுக்கு எரிகாயம்?

## வவுனியாவில் சிகிச்சை அளிக்கும் பிரெஞ்சு மருத்துவர்கள் தகவல்

கொழும்பு, மே 11

வன்னியில் காயமடைந்து வவுனியாவுக்கு கொண்டுவரப்பட்டோரில் சிலரின் உடலில் காணப்படுகின்ற எரிகாயங்கள், அவர்கள் தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனரோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியிருப்பதாக, வவுனியா செட்டிக்குளத்திலுள்ள தள வைத்தியசாலையில் பணியாற்றும் பிரான்ஸ் நாட்டு மருத்துவர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர் என்று ஏ.எவ்.பி. செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

இலங்கை அரசின் மீட்பு நடவடிக்கை காரணமாக சாதாரண பொதுமக்கள் எவ்வளவு பாரிய விலையைச் செலுத்த வேண்டியுள்ளது என்பதை இது புலப்படுத்துகிறது எனக் குறிப்பிட்டுள்ள ஏ.எவ்.பி., இதுபற்றி மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

செட்டிக்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரான்ஸ் மருத்துவமனையில் கடந்த இரு வாரங்களில் 700 பேருக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 100 பேர் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த மருத்துவமனையில் 72 சத்திர சிகிச்சை நிபுணர்கள் பணிபுரிகின்றனர்.

அதிர்ச்சியில் உறைந்து மெலிந்த நிலையிலுள்ள இடம்பெயர்ந்த மக்கள் அரசின் மீட்பு நடவடிக்கைக்காக தமிழ் பொது மக்கள் எவ்வளவு பாரிய விலையைச் செலுத்தவேண்டியுள்ளனர் என்பதைப் புலப்படுத்துகின்றனர்.

சாதாரண வறிய ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், முதியவர்களும் எவ்வாறு ஷெல் வீச்சுக்கும், துப்பாக்கிப் பிரயோகத்துக்கும், குண்டுத்தாக்குதலுக்கும் இலக்காகியுள்ளனர் என்பதை அவர்களின் காயங்கள் புலப்படுத்துகின்றன.

**வெள்ளை நிறத்தில் எரிகாயங்கள்**

மருத்துவமனையில் பொதுமக்களின் உடல்களிலிருந்து இதுவரை அகற்றப்பட்ட துப்பாக்கி ரவைகள், வெடிகுண்டுச் சிதறல்களின் எண்ணிக்கை தம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளன என டானியல் கௌவ் ஜக்ஸ் என்ற சத்திரசிகிச்சை நிபுணர் தெரிவித்தார்.

10நாள்களில்30துப்பாக்கி ரவைகளைஅகற்றினோம். இவற்றில் 10 ரவைகள் குழந்தைகளின் கை, கால்களிலிருந்து அகற் றப்பட்டன.



வன்னியில் காயமடைந்து செட்டிகுளத்திலுள்ள பிரான்ஸ் நாட்டு தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பொதுமகன் ஒருவருக்கு பிரான்ஸ் மருத்துவர்கள் சிகிச்சை அளிக்கின்றனர்.

36 வயது பெண் கடும் எரிகாயங்களுக்குள்ளாகியிருந்தார். இவர் இரண்டு வாரங்களுக்கு முன்னர் இரசாயனக் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகியிருந்தார் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

சிலருடைய கைகள் வெள்ளை நிறத்தில் எரிகாயங்களுடன் காணப்பட்டன. இது பொஸ்பரஸ் காரணமாக ஏற்பட்ட எரிகாயமாக இருக்கலாம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

சர்வதேச பிரகடனங்களின்படி இவ்வகையான ஆயுதங்களைப் பொதுமக்களின் பகுதிகளில் பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.

**இரண்டு தரப்புகளும் பரஸ்பரம் குற்றச்சாட்டு**

இலங்கையில் போரிடும் இரு தரப்பும் பரஸ்பரம் இரசாயன ஆயுதப் பாவனை குறித்து குற்றம் சாட்டுகின்றன.

எனினும், வடபகுதிக்குச் செல்வதற்கு அரசு தடை விதித்துள்ளதால், மோதல்கள் எவ்வாறு இடம்பெறுகின்றன என்பதை சுயாதீனமாகக் கண்காணிப்பது சாத்தியமற்ற தாகவுள்ளது.

செட்டிக்குளம் மருத்துவமனையில் வைத்தியர்கள் இரு தரப்பின் மீதும் குற்றச்சாட்டுகளை சுமத்த தயங்குகின்றனர். வெளிநாட்டு விமர்சனங்களை இலங்கை அரசு கவனத்தில் எடுப்பதில்லை.

''நாங்கள் வெறுமனே துப்பாக்கி ரவைகளை அகற்றுகிறோம். காயங்களுக்கு சிகிச்சையளிக்கிறோம். இவற்றை யார் செய்தார்கள் என ஆராய்வதில்லை'' என்கின்றனர் மருத்துவர்கள். (அ-சி)

# பிரிட்டன் ஊடகவியலாளர்கள் மூவரை நாடு கடத்துகின்றது இலங்கை அரசு

கொழும்பு, மே 11

மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்தவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள நலன்புரி முகாம்களில் காணப்படும் நிலை குறித்து உண்மைத் தகவல்களை வெளியிட்ட பிரிட்டனின் 'சனல் - 4' தொலைக்காட்சியின் ஊடகவியலாளர்களை நாடுகடத்த இலங்கை அரசு முடிவு செய்திருக்கிறது.

குறித்த தொலைக்காட்சியின் ஆசியாவுக்கான செய்தியாளர் நிக்பட்டன் வோல்ஷ் உட்பட மூவர், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திருகோணமலையில் வைத்துக் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் மீது நாட்டின் கௌரவத்துக்கு களங்கத்தை ஏற்படுத்தும் விதத்தில் செயற்பட்டார்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளதுடன், இவர்களது விசா இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக குடிவரவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவர்களை உடனடியாக நாடு கடத்துமாறு பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

இதற்கமைய'சனல் 4 நியூஸின்' ஆசியாவுக்கான செய்தியாளர் நிக் பற்றன் வால்ஷ் நேற்றுக்காலை விமானம் மூலம் நாடு கடத்தப்பட்டார்.

ஏனைய இருவரும் விரைவில் நாடு கடத்தப்படவிருக்கின்றனர் எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நலன்புரி முகாம்கள் குறித்து தாம் வெளியிட்ட செய்திகள் பற்றி பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தனது அதிருப்தியை வெளியிட்டார் எனக் குறிப்பிட்ட நிக் பட்டன் வோல்ஷ், 'எம்முடன் உரையாடும் போது கோத்தபாய ராஜபக்ஷ, சீற்றத்துடன் காணப்பட்டது டன், இதற்காக நாங்கள் நாடு கடத்தப் படலாம் என்று தெரிவித்தார்'' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

''இலங்கையில் என்ன நடக்கின்றது என்பதை நீங்கள் விரும்பிய விதத்தில் சொல்லலாம். எனினும், அதனை உங்கள் நாட்டிலிருந்து சொல்லவேண்டும்'' எனப் பாதுகாப்பு செயலாளர் குறிப்பிட்டார் எனவும் 'சனல் 4 நியூஸின்' வால்ஷ் தெரிவித்துள்ளார்.

'சனல் 4' தொலைக்காட்சி சமீபத்தில் வவுனியா அகதி முகாமிற்குள் எடுக்கப்பட்ட ஒளிநாடாவை வெளியிட்டிருந்ததுடன் அங்கு துஷ்பிர யோகங்கள் இடம்பெறுகின்றன எனவும் தெரிவித்திருந்தது. (அ-சி)

# வெசாக் தினத்தை முன்னிட்டு ஆற்றில் குளிக்கச் சென்ற ஐவர் நீரில் மூழ்கி மரணம்

நீர்கொழும்பு - கொச்சிக்கடை, கட்டான பகுதியிலுள்ள ஆற்றில் நேற்றுமுன் தினம் மாலை நீராடச்சென்ற ஐவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் எனக் கொச்சிக்கடைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் இரு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் எனவும், வெசாக் தினத்தை முன்னிட்டு நீராடச் சென்றபோதே இவர்கள் நீரில் மூழ்கினர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பிலியந்தலைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களான மூவர் தமது உறவினர் வீட்டுக்குச் சென்று அவர்களுடன் ஆற்றுக்கு நீராடச் சென்றபோதே இவ்வாறு நேர்ந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களின் சடலங்கள் நேற்றுக் காலை மீட்கப்பட்டு நீர்கொழும்பு வைத்தியசாலையின் பிரேத அறையில் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொச்சிக்கடைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (சி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வன்னியில் நேற்றும் மக்கள் கொல்லப்பட்டிருக்க போரை நிறுத்திவிட்டோம் என வீறாப்பு பேசுவதா?

## சோனியா, கருணாநிதியிடம் ஜெயலலிதா கேள்வி



கொழும்பு, மே 11

முள்ளிவாய்க்கால் பகுதியில் 2 ஆயிரம் தமிழர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொல்லப்பட்ட நிலையில், போரை நிறுத்திவிட்டோம் என்று கூற கருணாநிதிக்கும் சோனியாவுக்கும் எப்படி மனம் வருகிறது - என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் ஆற்றிய உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

இலங்கைத் தமிழர் பிரச்சினை, இன்றைக்கு உலகம் முழுவதும் வாழுகின்ற ஒவ்வொரு தமிழ் நெஞ்சையும் உலுக்குகின்ற பிரச்சினை. உலகெங்கும் வாழும் 8 கோடி தமிழர்களையும் வேதனைக்கு உள்ளாக்கி இருக்கக்கூடிய பிரச்சினை. இந்த நிமிடத்தில் கூட இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக எந்த ஓர் உறுதியான முடிவையும் அறிவிக்காமல் கருணாநிதி கபட நாடகம் ஆடிக் கொண்டிருக்கிறார்.

இலங்கையில் தமிழ் மக்களின் துயரங்களைப் போக்க தனி ஈழம் ஒன்றுதான் நிரந்தரத் தீர்வு என்று நான் பிரகடனம் செய்தேன். அத்தகைய தனி ஈழத்தை அமைத்துத்தரப் பாடுபடுவேன் என்றும் சூளுரைத்தேன். என்னுடைய இந்த உரிமைக்குரலுக்கு உலகெங்கும் இருந்து வந்திருக்கும் பாராட்டுக்களையும், நல்வாழ்த்துகளையும் தாங்கிக் கொள்ள முடியாத கருணாநிதி, உடனே தானும் தனி ஈழம் அமைக்க முயற்சிக்கப் போவதாகக் கூறினார். தனி ஈழம் என்பது கருணாநிதியின் தனிப்பட்ட கருத்து, எங்களுக்கு அதில் உடன்பாடு இல்லை என்று காங்கிரஸ் கட்சி தன்னுடைய நிலைப்பாட்டைக் கூறியது.

நேற்றிலிருந்து (அதாவது நேற்று முன்தினம்) முள்ளிவாய்க்கால் என்ற தமிழர் பகுதியில், இலங்கை இராணுவம் நடத்தி வரும் தாக்குதலில், இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் கொல்லப் பட்டனர் எனச் செய்தி வந்திருக்கிறது.

இப்படி ஒவ்வொரு நாளும் தமிழர் படுகொலை குறித்த செய்தி வந்து கொண்டிருக்கிறது. உண்மை இப்படியிருக்க, நாங்கள் போர் நிறுத்தம் ஏற்படுத்தி விட்டோம். அது எங்களுக்குக் கிடைத்த வெற்றி என்று சொல்லுவதற்கு சோனியா காந்திக்கும், கருணாநிதிக்கும் எப்படி மனம் வருகிறது?

தேர்தலுக்கு முன், இலங்கையில் தமிழர்களை முற்றிலுமாக அழித்துவிட, சபதம் மேற்கொண்டது போல செயற்படும் மஹிந்த ராஜபக்ஷ வுக்கு ஆயுதம் வழங்கியவர்கள் நீங்கள். மன்னிக்க முடியாத இந்தத் துரோகத்தைச் செய்த உங்களை, தலை முறை தலை முறையாக எங்கள் தமிழ் இனம் நினைவில் வைத்துத் தண்டிக்கும் - என்றார்.

# ராஜீவ் - ஜெயவர்த்தன ஒப்பந்தப்படி ஈழத்தமிழர்கள் பிரச்சினைக்குத் தீர்வு!

## சென்னையில் சோனியா தெரிவிப்பு



சென்னை, மே 11

ராஜீவ் - ஜெயவர்த்தன உடன்பாட்டின் படி ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் - என்று இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி கூறியுள்ளார்.

சென்னை தீவுத்திடலில் நேற்றுமாலை நடைபெற்ற தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

இலங்கையில் இன்று அப்பாவித் தமிழர்கள் படும் வேதனையும், துயரமும் கண்டு நான் மிகுந்த வேதனையை அடைந்துள்ளேன். பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என பல்லாயிரக்கணக்கானோர் பேரவதிக்குள்ளாகியுள்ளனர். இது எனக்கு வேதனையைத் தருகிறது. நான் கவலை அடைந்துள்ளேன்.

இலங்கையில் போர்ப் பகுதியில் சிக்கியுள்ள அப்பாவித் தமிழர்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்பதை உறுதிபடக் கூறிக் கொள்கிறேன். இலங்கையில் போர் நிறுத்தம் செய்யப்படுவது குறித்து இந்தியா உறுதிபட செயற்பட்டு வருகிறது என ஏற்கனவே பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் அந்நாட்டு சட்டத்திற்குட்பட்டு - சம உரிமை, சம அந்தஸ்துடன் வாழ - அமைதியுடன் வாழ - கௌரவத்துடன் வாழ - ராஜீவ் காந்தி ஜெயவர்த்தன அமைதி ஒப்பந்தத்தின் அடிப்படையில் தீர்வு காணப்படும் - என்றார்.

## பிரங்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதாகவும் சொன்னார்.

டாக்டர் சண்முகராஜாமேலும் தெரிவித்ததாவது:-

காயமடைந்தவர்களில் மிக மோசமாகக் காயமுற்ற இருநூறுக்கும் மேற்பட்டவர் கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதுடன் மருந்துப் பொருள்கள் தமக்குக் கிடைக்கப்பெற்ற போதும் ஒரே சமயத்தில் பெருந்தொகையானோர் காய மடைந்து வந்துள்ளதால் அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதில் சிரமங்களும் பற்றாக் குறைகளும் ஏற்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருப்பதனால் அவர்களை அழைத்துச் செல்வதற்குச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் இன்று திங்கட்கிழமை வெள்ளமுள்ளி வாய்க்கால் பகுதிக்கு வருவதற்கு ஏற்பாடு கள் செய்யப்பட்டுள்ளதாக அங்கு பணியாற்றும் உள்ளூர் செஞ்சிலுவைப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

இராணுவம் மறுப்பு

இதேவேளை, இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெற்றதை இராணுவம் மறுத் துள்ளது.

"பாதுகாப்பு வலயப் பகுதியில் ஷெல் தாக்குதல் எதுவும் இடம்பெறவில்லை. சிறிய ரக ஆயுதங்களையே அங்கு பயன் படுத்துகிறோம்" என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார குறிப்பிட்டுள்ளார். (அ-6)


நீங்களும் Engineer

பதிவுகள் 14.05.2009 முன் நேரில்

*செயன்முறையுடன் கூடிய விரைவான வகுப்புக்களில்..

introducation to Network, Network Cabling, Installing Windows Server 2003,2008 & Vista

Creating Network Connections

on line Class

Installing Active Directory Services

Creating and Managing Domain Accounts

Shared Files and Folders(Shared Folder Permissions, Administrative Shared Folders, .....)

Delegating Administrative Control........Etc

Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்

*Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு

*வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்.

*USA,UK, பெங்களூர் பல்கலைக்கழகங்களில் BSc,MSc

*தேர்ச்சி பெறும் அனைவருக்கும் Student Visa, Work Permit Carrier Guidance

Professional

கற்கும் அனைவருக்கும் Diploma In Hardware Technology Free (Installation, Configuration, Printers, Trouble Shooting & Maintenance, Networking, Assembling)

324, பலாலி வீதி, MCS யாழ்ப்பாணம் Supported By UNDP/JRRP

பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Route - 764


## ஆபத்தான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கை ஒன்றில் கோரப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் 24 மணி நேரத்தில் 2,000 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். பொதுமக்களுக்கான பாதுகாப்பு வலயம் என வரையறுக்கப்பட்ட, மக்கள் அடர்த்தியாகவுள்ள ஒரு பகுதியில் சிறிலங்காவின் வானூர்திகள் நடத்திய குண்டு வீச்சுக்களினாலும், எறிகணைத் தாக்குதல்களினாலும் போரில் சம்பந்தப்படாத இவர்கள் கொல்லப்பட்டிருப்பது அரச பயங்கரவாதமும் போர்க் குற்றமுமாகும்.

ஆபத்தான நிலைமையில் உள்ள பொது மக்களைப் பாதுகாப்பதில் தமக்குள்ள பொறுப்புக்களில் இருந்து ஐக்கிய நாடுகள் சபையும் அனைத்துலகமும் தவறிவிட்டன என தமிழ் மக்கள் அதிருப்தியடைந்திருக்கின்றனர். அண்மைய காலங்களில் இதுபோன்ற அனைத்துலகப் பிரச்சினைகள் உருவாகியபோது ஐ.நா.வும் அனைத்துலக சமூகமும் எவ்வாறான நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டனவோ அது போன்ற நடவடிக்கைகளைப் பாரா பட்சமற்ற முறையில் மேற்கொள்ள வேண்டும் என்பதையே நாம் கேட்கின்றோம் -என்று அந்த நீண்ட அறிக்கையில் கோரப்பட்டுள்ளது. (அ)

## சோனியாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தமிழர்களின் படுகொலைக்குத் துணைபோன சோனியா காந்தி தமிழகம் வரக்கூடாது என்று வலியுறுத்தி சென்னை சைதாப்பேட்டை பனகல் மாளிகை அருகில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்குத் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு, திரையுலகத் தமிழீழ ஆதரவாளர்கள் இயக்கம், தமிழக சட்டத்தரணிகள், தமிழீழ போராட்டக் குழு பேரவை உள்ளிட்ட அமைப்புகளின் சார்பில் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இப்போராட்டத்தில் பழ. நெடுமாறன், பாரதிராஜா உட்பட பலர் கறுப்புக் கொடி ஏந்தி கலந்து கொண்டனர்.

சோனியா காந்தி, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக தொடர் முழக்கங்களும் எழுப்பப்பட்டன.

போராட்டத்தில் பேசிய பழ.நெடுமாறன், இலங்கையில் கடந்த சில மாதங்களில் மட்டும் 10 ஆயிரத்திற்கும் அதிகமான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

5 லட்சம் தமிழர்கள் வாழ்விடங்களை இழந்திருக்கின்றனர். தமிழர்களுக்குச் செல்லும் உணவுப் பொருள்களை இலங்கை அரசு தடுத்துவிட்டதால் நாள்தோறும் 15 தமிழர்கள் பட்டினியால் இறக்கின்றனர்.

தமிழர்களின் படுகொலைக்காக காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி இதுவரை அனுதாபம் கூடத் தெரிவிக்கவில்லை. ஆனால் இப்போது தமிழகத்திற்கு வாக்கு கேட்டு வந்திருக்கிறார். அவரை தமிழினத் துரோகிகள் சிலர் மாலை போட்டு வரவேற்பார்கள்.

இலங்கையில் போரை நிறுத்த இந்தியா நடவடிக்கை எடுக்காவிட்டால் சோனியா காந்தி எந்தக் காலத்திலும் தமிழகம் வர முடியாது - என்று எச்சரித்தார்.

இதைத் தொடர்ந்து தடையை மீறி கறுப்புக்கொடி போராட்டம் நடத்தினர் எனக் கூறி பழ.நெடுமாறன், இயக்குநர் பாரதிராஜா, உட்பட 200 இற்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நேற்று மாலை விடுதலை செய்யப்பட்டனர்.


## தேவை

பேக்கறித் தொழிலில் அனுபவமுள்ளவர்கள் தேவை. இன்றும் (11.05.2009) நாளையும் காலை 9மணிக்கு நேரில் வரவும்.

118, றொலக்ஸ் பேக்மாட்,

[illegible] வீதி,

யாழ்ப்பாணம்.


## இந்தியாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசுக்குக் கிடைக்கவில்லை.

எனினும் சமாதான உடன்படிக்கையைத் தொடர்ந்து இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் பாதுகாப்பு ஒத்துழைப்பை வழங்க முன்வந்தன.

புலிகளின் வலையமைப்புகள் பலவீனப்படுத்தப்பட்டன

உதாரணத்திற்கு, விடுதலைப் புலிகளின் கப்பல்களை நடுக்கடலில் அழிப்பது இந்தியாவினதும் அமெரிக்கா மற்றும் ஏனைய சில நாடுகளினதும் உதவியின்றி சாத்தியமாகியிராது.

வெளிநாடுகளில் விடுதலைப் புலிகளின் வலையமைப்புகள் பலவீனப்படுத்தப்பட்டன.

பாதுகாப்புப் பயிற்சி, புலனாய்வு ஒத்துழைப்பு போன்ற விடயங்களிலும் இந்தியாவும் வேறு பல நாடுகளும் இலங்கை அரசுக்கு ஒத்துழைத்தன.

நாங்கள் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டோம். உதவிகளைப் பெற்றோம். பயிற்சிகளும் கிடைத்தன. புலனாய்வு விடயங்களில் ஒத்துழைப்புக் காணப்பட்டது.

அத்துடன் இலங்கையின் வான்வெளி பாதுகாப்பிற்கான ராடர்களையும் இந்தியா வழங்கியது என்றார்.

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்தியப் பொதுத்தேர்தலில் இலங்கை விவகாரம் முக்கியத்துவம் பெற்றிருக்கின்ற நிலையில் - இலங்கை அரசுக்கு இந்தியா இராணுவ உதவிகள் எதனையும் வழங்கவில்லை என்று ஆளும் காங்கிரஸ்கட்சி அடியோடு மறுத்துவரும் சூழலில் - அந்நாட்டின் தொலைக்காட்சி ஒன்றுக்கு ரணில் இத்தகைய கருத்தைப் பகிரங்கப்படுத்தியிருக்கின்றமை, பாரத அரசுக்கு பெரும் தர்மசங்கடத்தை ஏற்படுத்தியிருப்பதாக அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (அ-சி)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**பதில்:** புலிகளின் கடைசிக் கட்டம் இது. தாங்கள் தப்ப எந்தத் தில்லு முல்லுகளையும் அவர்கள் இந்த நேரத்தில் செய்வார்கள். அவர்களுக்கு இப்போது உள்ள ஒரே வழி, அரசாங்கத்தின் மீது அவதூறைச் சுமத்துவது அல்லது சர்வதேச அழுத்தத்தைக் கொண்டு வருவது அவ்வளவுதான். அதனால்தான் அவர்களின் பிரசார இயந்திரம் இப்படியான புரளிகளைக் கிளப்பி 350, 200, 2000 என்று கதை கட்டி விட்டுள்ளது. எனவே இது விடுதலைப் புலிகளின் ஒருபிரசாரம் என்றுதான் சொல்லவேண்டும்.

**கேள்வி:** 378 பேரின் சடலங்கள் வந்துள்ளன, அதில் 106 சிறுவர்கள்,1122 பேர் காயமடைந்துள்ளனர் என்று அரசாங்க மருத்துவரே தெரிவித்துள்ளாரே?

**பதில்:** அவர் அரசாங்க மருத்துவர் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அவர் இருப்பது புலிகளின் தலைமைப் பீடமும், போராளிகளும், ஆயுதங்களும் செறிந்துள்ள மூன்றரை சதுர கிலோமீற்றர் பரப்பளவுடைய மிகச் சிறிய இடம். இதற்குள் இருந்து கொண்டு அவரால் முற்று முழுக்க உண்மையைப் பேசிவிட முடியும் என்று புத்தியுள்ள எவராலும் நம்ப முடியாது.

**கேள்வி:** நீங்கள் ஒன்று சொல்கிறீர்கள். புலிகள் ஒன்று சொல்கிறார்கள். இருவரும் சொல்வதை விட, தனிப்பட்ட முறையில் அங்கு சென்று பார்த்து உண்மையைச்சொல்ல செய்தியாளர்களை நீங்கள் அங்கு அனுமதிப்பது தானே? ஏன் தடுக்கிறீர்கள்?

**பதில்:** செய்தியாளர்கள் உண்மையைச் சொல்ல நாங்கள் ஒன்றும் தடுக்க வில்லை. புலிகள் பகுதியிலிருந்து தப்பி வந்த இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இருக்கும் முகாம்களுக்குப் போய்த் தனிப்பட்ட முறையில் செய்திகளை அறிய வழி விட்டிருக்கிறோம். இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இருக்கிற இடத்தை விட்டு, சிறி தளவு பேர் இருக்கிற இடத்தில் போய் உண்மையை அறியப் போகிறேன் என்கிறார்கள்.

**கேள்வி:** அந்த முகாம்களுக்குக் கூடப் பத்திரிகையாளர்கள் அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பயணத்தின் மூலம் தானே அழைத்துச் செல்லப்படுகிறார்கள். சுதந்திரமாகப் போக அனுமதிக்கப்படுவ தில்லையே.

**பதில்:** ஏற்பாடு செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. அங்கே என்ன திருவிழாவா நடக்கிறது? வேடிக்கை பார்க்க? அங்கே முக்கியமான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அவை பாதிப்படைய அனுமதிக்க முடியாது. அங்கு இயங்கும் சர்வதேச உதவி அமைப்புகள் கூட குழப்பம் வேண்டாம், அனைத்தையும் ஒழுங்கு செய்யுங்கள் என்கின்றன. அதனால் தான் நாங்கள் ஏற்பாடுகளைச் செய்கிறோம். முகாமுக் குப் போனவுடன் சுதந்திரமாகப் பேச அனுமதிக்கிறோம். (அ-06)

## நெதர்லாந்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொலைகளை கேள்வியுற்று நேற்றுக்காலை முதல் இரவு வரை மக்கள் தொடர்ந்து நாடாளுமன்றத்துக்கு முன்பாகத் திரண்டனர்.

திடீரென ஒழுங்கு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டமெனினும் பெருந்தொகையான மக்கள் அணிதிரண்டனர்.

* வன்னியில் இடம்பெறும் யுத்தம் உடனடியான நிறுத்தப்படவேண்டும்.

* தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் - என்ற கோஷங்களை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் தமிழ், டச்சு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எழுப்பினர்.

வன்னியில் படுகொலை செய்யப்படும் அப்பாவித் தமிழ் மக்களின் பேரவல நிலையை வெளிப்படுத்தும் பாதாகைகளையும் அவர்கள் தாங்கியிருந்தனர்.


## பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்

31.12.1969 தொடக்கம் அன்னையின் 117 ஆவது ஜன்ம தினத்தில் ஆரம்பமானது. கடந்த 40 ஆண்டுகளைத் தாண்டியுள்ள ஆன்மீகப் பயணத்தில் கொழும்பு ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் உபதலைவர் தவத்திரு சுவாமி சர்வரூபானந்தஜி மகராஜ் அவர்களின் யாழ். விஜயத்தையிட்டு பெருமகிழ்வு எய்துகின்றோம். சுவாமிகளின் திருப்பாதம்படுவதால் ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷனின் பணிகள் இங்கு பரவுவதோடு உலகெலாம் ஆல விழுதுகளைப் பரப்பிய இராமகிருஷ்ணமிஷன் 1976ஆம் ஆண்டுக்குப் பின் இங்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட உரும்பிராயில் உள்ள நிலத்தில் அமைய உள்ளதாக அறிந்தோம் அன்னையின் பெருங்கருணை தானன்றோ!

ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை. செயலாளர்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.05.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org